Registered No. M. 1926

உ
கடவுள் துணை.

தர்மபோதினி.

தர்மபுரி என்னும் தலத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" —திருக்குறள்

தொகுதி 1 Vol 1	இரக்தாக்ஷி-ஸு கார்த்திகை-மீ NOVEMBER 1924.	பகுதி 8 No. 8

உள்ளுறை — பக்கம்.

1. கடவுள் வணக்கம் 225
2. இந்தியரவும் புத்தகசாலை இயக்கமும் 226
3. மணம் IV 230
4. ஸ்ரீ ஜகத்குருமகாத்மியம் 234
5. திருக்குறளின் அரசியல் தோற்றம் 237
6. விக்ரஹ ஆராதனம் 241
7. தூக்கிவினைசெய் 245
8. ஒற்றுமை 248
9. கம்பர் கவிநயம் 252
10. ஆரியமும் அதன் பெருமையும் 255

"தர்மபோதினி"

ஏஜெண்டுகள் தேவை! — தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்!!

தெய்வபக்தி நல்லுணர்ச்சி, கல்வி, நாகரீகம், சரித்திர ஆராய்ச்சி, இயற்கை ஞானம் ஆகிய அருமையான விஷயங்களடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை. சந்தா தொகையை முன்பணமாக அனுப்பவேண்டும். அல்லது வி.பி. மூலமாய் முதல் சஞ்சிகையை ஒரு வருஷ சந்தாவைச்செலுத்திப் பெற வேண்டும். வருஷ சந்தாவை மணிஆர்டர்செய்து பத்திரிகையைத் தருவித்துக்கொள்வது லாபகரமானது.

வி. பி. செலவு பிரத்தியேகம்.

உள்ளூர் வாசிகளுக்கு வருஷ சந்தா	ரூ.	1	4	0
வெளியூர் வாசிகளுக்கு	,,	1	8	0
வெளிநாடுகளுக்கு	,,	2	8	0
தனிப்பிரதி	,,	0	3	0
ஜீவிய சந்தா	,,	25	0	0

பத்திராதிபர், தர்மபோதினி, தர்மபுரி.

அறிவிப்பு.

வியாபாரிகளே!

உங்கள் சரக்குகள் நாடெங்கும் பரவி நல்ல லாபம் கொடுக்க "தர்மபோதினி"யில் விளம்பரஞ் செய்யுங்கள். சொற்ப செலவில் வெகுதூரத்திலுள்ளவர்களுக்கும் உங்கள் சரக்குகளைப்பற்றி அறிவித்து வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ள ஏற்ற சாதனம்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"தர்மபோதினி"
தர்மபுரி, சேலம் ஜில்லா

18

உ

கடவுள் துணை.

தர்மபோதினி.

தெய்வபக்தி, நல்லுணர்வு, கல்வி, நாகரீகம், இயற்கைத் தத்துவங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கண இலக்கிய நுட்பங்கள், முதலியவற்றுடன் வெளிவந்துலாவும் ஓர் உயர்ந்த மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1 } இரக்தாக்ஷி-ஹு கார்த்திகை-மீ } பகுதி 8
Vol 1 } NOVEMBER 1924 } No. 8

சிவபெருமான் வணக்கம்.

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங்
கறிவினி னருளான் மன்னி யம்மையோ டப்பனாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

(அருணந்திசிவாசாரியர்.)

ஸ்ரீ கணேசர் வணக்கம்.

'ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே'

(அருணந்திசிவாசாரியர்.)

இந்தியாவும் புத்தகசாலை இயக்கமும்.

அநேக நூற்றுண்டுகளுக்குமுன், இத்தேசத்தில், பல நகரங்களில் பெரிய புஸ்தகசாலைகள் இருந்துவந்தன. அநேக சமஸ்தானங்கள், சிறந்த வித்வான்களை யாதரிக்கப் போட்டி போட்டு வந்தார்கள். சிறந்த நூல்களைச் சேகரிப்பதிலும், அறிவாளர்களைப் புதிய நூல்களை யியற்றத் தூண்டுவதிலும் மிக்க ஊக்கங்கொண்டிருந்தார்கள். புராதன கிரந்தங்களை அநேக பாஷைகளில் மொழி பெயர்க்குந் தொழிலிலோ, அல்லது, ஒரு நூலுக்கு அநேக பிரதிகளைத் தயாரிப்பதிலோ, அநேகரை அவர்கள் அமர்த்தியிருந்தார்கள். ஒவ்வொரு சுதேசமன்னனும் ஒவ்வொரு புஸ்தகக்களஞ்சியத்தைச் சேகரித்து வந்தானெனக் கூறுவது மிகையாகாது. பனையோலையில் எழுத்தாணியால் எழுதிவைத்த நூல்கள் பல. நாட்டுக் காகிதங்களின்மேல், கறுப்பான மையினுல் எழுதப்பட்ட புஸ்தகங்கள் பல. தாமிரத்தகடுகளின்பேரிலும் சில முக்கியமான சிறு நூல்களை யெழுதியிருந்தார்கள். வெளி நாட்டினர்கள் இந்நாட்டின்மீது படையெடுத்துவந்தகாலங்களில், அவர்களால் பல சிறந்த புஸ்தக நிலயங்கள் பாழாக்கப்பட்டன. அதனுல், அரும்பெரும் கிரந்தங்கள் அழிந்துபோயின. அதிரிஷ்டவசமாக, இன்றனவும் தஞ்சாவூரில், அரண்மனைப் புஸ்தகக் களஞ்சியமொன்றிருக்கிறது. பழைய நூல்களிற் பல லண்டன் மாநகரிலுள்ள இந்திய ஆபீஸ் புஸ்தகசாலையில் இருக்கின்றன. சென்னைக்கருகிலுள்ள அடையாரில் பிரம்மஞான சங்கத்தினுதரவிலுள்ள ஒரு புஸ்தகாலயத்திலும் சில பழைய பிரதிகளைக் காணலாம்.

சிறந்த புஸ்தகப் பிரதிகளுடைய புஸ்தகாலயங்களொரு புறமிருக்க, இந்நாளில், அமெரிக்கா முதலிய சில தேசங்களில், ஒரு நூதன புஸ்தகக்களஞ்சிய இயக்கம் பரவிவருகின்றது. இத்தேசத்திலும் சில மாகாணங்களில் அம்மாதிரியான இயக்கமொன்று சில வருஷங்களாக உலவிவருவதால், நம்பத்திரிகையை வாசிக்கும் நண்பர்கள் அதனையறிய ஆவலுள்ளவர்களாக விருக்கக்கூடுமென்றெண்ணி, அதைப்பற்றிச் சில குறிப்புகள் ஈண்டு வரைய விரும்புகிறோம்.

ஜனங்களுடைய அஞ்ஞானம் நீங்கி அறிவு முதிர்ச்சியடைந்து விளங்க கல்வி மிக அவசியம் என்பது வெளிப்படை 'இளமையிற்கல்' என்ற ஔவையாரின் வார்த்தைகளுக்கிணங்க, சிறு வயதுதான் கல்வி கற்பதற்குகந்த காலமென்பது யாவரும் ஒப்பமுடிந்த விஷயம். சிறுவர்கள், பள்ளிக்கூடங்களில் கற்கும் விஷயங்களினால் மட்டும், அவர்களுக்கு இவ்வுலக ஞான பேற்படாது. உலகானுபவங்களை செவ்வனே உணர, அவர்கள் அநேக புஸ்தகங்களை வாசித்தலின்றியமையாதது. ஆரம்பப் படிப்பை முடித்த ஒருவன் தாய்பாஷையிலெழுதியுள்ள புஸ்தகங்களைத் தான் வாசித்தறியக்கூடுமாதலின், அவனுக்காகத் தாய்ப் பாஷையில் புஸ்தகங்களெழுதுவித்தல் அவசியமாகும். அமெரிக்காக்கண்டத்தில், (Public Library, Municipal Library, Village Library, Circulating Library) பொது லைப்ரரி, முனிஸிபல் லைப்ரரி, கிராமாந்தர லைப்ரரி, சுற்றிவரும் லைப்ரரி என்ற பலவிதமான புஸ்தகாலயங்களை அவற்றை வாசிக்கும் ஜனங்களின் கல்வியளவுக்கேற்றவாறு புஸ்தகங்களைச் சேகரித்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், சிறுவர்களுக்கெனவும், பெண்டிருக்கெனவும், ஆடவருக்கெனவும் புஸ்தகாலயங்களுண்டு. கிராமாந்தர லைப்ரரிகளில், விவசாயம், சுகாதாரம், சாஸ்திர ஞானம், மதஞானம் முதலிய விஷயங்களைப் பற்றியும், இதர தொழில்களைப்பற்றியுங் கூறும் புஸ்தகங்களே அதிகமாயிருக்கும். ஒவ்வொரு கிராமத்திலுமிருக்கும் வாசகசாலை, தினந்தோறும் சில காலங்களில் ஜனங்களின் உறைவிடமாயிருக்கும். அதனால், பரஸ்பர நேசப்பான்மை எளிதில் ஏற்படும். அடிக்கடி நிபுணர்கள் அங்குவந்து பிரசங்கங்கள் புரிந்து ஜனங்களின் அறிவை விசாலிக்கவுங் கூடும். வான சாஸ்திர நிகழ்ச்சிகள், சுகாதாரக் குறிப்புகள், பூகோளம், சரித்திரம், இராஜ்ய நிலைமை, விவசாயம், வியாபாரம் இவைபோன்ற விஷயங்களை எளிதிலெல்லோருமறியுமாறு செய்ய, வாசகசாலைகள் ஒரு சிறந்த சாதனங்களாகும். தினந்தோறும், சாயங்கால நேரங்களில், வீண்காலக்ஷேபம் செய்வதை விடுத்து வாசகசாலைகளுக்குச் சென்று தினசரி மாதாந்தப் பத்திரிகைகளை வாசித்தும், அங்கு சேகரித்து வைக்கப்பட்ட, புஸ்தகங்களைப்படித்தும் வந்தால், ஒரு கிராமத்தில் சமூக வாழ்க்கை சிறந்து விளங்குமன்றோ? எனவே, மேற்கூறிய நன்மைகளைச் சிந்தித்து, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு இலவச வாசகசாலையும், புஸ்தக நிலையமும் ஏற்படுத்த முன்வருவது அறிவாளர்களின் கடமையாகும்.

ஒரு கிராமத்திலுள்ள பொது புத்தகசாலை எவ்விதமிருக்க வேண்டுமென்று சற்று கவனிப்போம். சிறுவர்கள், சிறுமிகள், யுவகர்கள், வயோதிகர்கள், கைத்தொழிலாளிகள், குடியானவர்கள், ஆண்பாலர்கள், பெண்பாலர்கள் ஆகிய பலவித ஜனங்களும் வாசித்தறிந்து தம் அறிவை விசாலிக்கக்கூடிய புத்தகங்கள் அங்கிருக்கவேண்டும். கைத்தொழில்களைப்பற்றியும், பொது சௌகரியங்களைப்பற்றியும், நூல்கள் சேகரித்து வைக்கப்படவேண்டும். இவற்றைத்தவிர, மதவிஷயங்கள், சாஸ்திர நுட்பங்கள், தாய்ப்பாஷையாகிய தமிழின் பண்டைகால நூல்கள், அவற்றைத் தழுவி இயற்றப்பட்ட வசன காவிய நூல்கள், சம்ஸ்கிருத காவியங்களின் தமிழ்மொழி பெயர்ப்புகள், புராதன நாகரீகத்தை விளக்கும் கிரந்தங்கள், புராதன சரித்திர சம்மந்தமான புஸ்தகங்கள், ஒவ்வொரு கிராமத்தைப்பற்றிய கானிஷ்மாரி கணக்குப் புஸ்தகங்கள், அதன் சரித்திர புஸ்தகங்கள், முதலிய பலவும் சிறுவர்களும், பெரியவர்களும் எளிதில் கையாளக்கூடியபடி இருத்தல்வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள புஸ்தகசாலைக்கருகில், ஒரு வாசகசாலை ஏற்பட்டிருக்கவேண்டும். தினசரிப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், மாதாந்தப் பத்திரிகைகள் ஆகிய இவற்றைத் தருவித்து, சிறுவர்களுக்கெனவும், பெரியவர்களுக்கெனவும் தனி விடுதிகள் அமைத்து சிறுவர்கள் வரும் வாசகசாலையில், சித்திரப்படங்கள் கொண்டும் பெரிய எழுத்தில் பிரசுரித்துமுள்ள பத்திரிகைகளையே அதிகமாகச் சேகரித்தும், பெரியோர் வருமிடத்தில் மதவிஷயமாகவும், சமூக சீர்திருத்தம், ராஜீய வர்த்தமானம், பொருளாதார சாஸ்திரம் இவற்றைப் போதிக்கும் பத்திரிகைகளும்; ஸ்திரீகள் வந்து போகும் விடுதியில் அவர்களுக்கு அத்தியாவசியமான சிசு சம்ரக்ஷணை, குடும்ப அலுவல்கள், நூல் நூற்றல், வஸ்திரங்களைத் தயாரித்தல், அறுசுவையுண்டிகளைச் சமைத்தல் முதலியவற்றைப்பற்றிய பத்திரிகைகளும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு புஸ்தகாலயத்திற்கருகிலும், ஒரு கண்காக்ஷிச் சாலையிருப்பது நலம். அதில் பூகோள சம்பந்தமான படங்கள் நம் நாட்டின் அரும் பெரும் விஷயங்களைக்காட்டும் சித்திரங்கள் தேக அமைப்பு, சுகாதாரம் முதலியவற்றை நன்குவிளக்கும் படங்கள் ஆகிய இவைகள் தொங்கவிடப்பட்டிருக்கவேண்டும். சரித்திர சம்பந்தமான படங்கள், பல சிறந்த கட்டடங்கள் முதலியவற்றின் புகைப்படங்கள், (Photos) சிறுவர்களிட தேசாபிமானம் முதிர்ச்சியடையுமாறு பல தேசியப்படங்கள் பார்வைக்கு

வைக்கப்பட்டிருக்கவேண்டும். இம்மாதிரி செய்வதற்கு வேண்டிய திரவியச் செலவு ஒவ்வொரு கிராமத்து யூனியன் அதிகாரிகளும் சற்றுப் பிரயாசை யெடுத்துக்கொண்டால் கவர்ன்மெண்டாரிடமிருந்தும், ஸ்தலஸ்தாபன சங்கத்தாரிடமிருந்தும் பரோபகார குணமுள்ள உள்ளூர் வாசிகளாகிய தனவந்தர்களிடமிருந்தும் பேருதவி பெற்று இம்மாதிரியான புஸ்தகாலயங்கள் முதலிய நல்ல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தக்கூடும்.

(நாம் ஒரு எச்சரிக்கைச்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.) தற்சமயம் அநேக கிராமங்களில் புஸ்தகாலயங்களிருந்து வருகின்றன. அவற்றை ஆராய்ந்துபார்த்தால் நாவல்கள் என்ற மகுடங்கொண்ட கதைப் புஸ்தகங்களே அதிகமாக இருத்தலைக்காணலாம். அவை பெரும்பாலும் ஆங்கிலேய புஸ்தகங்களை யொட்டி மொழி பெயர்க்கப்பட்ட நூல்களாகும். ஆங்கிலேய மதானுஷ்டானங்களையும், சமூக நிலைமையையுந் தழுவி எழுதப்பட்ட அக்கதைகளை நம் தேசத்து ஸ்திரீபுமான்களும், சிறுவர் சிறுமிகளும் வாசிக்க வருவதினால் தேசாசாரத்திற்கு பங்கமேற்படும். ஆனால் அதிர்ஷ்டவசமாக இக்காலத்தில் சில பண்டிதர்கள் நம் தேசாசாரம், அனுஷ்டானம் இவைகளைப்பற்றிய அநேக சொற்சுவை, பொருட்சுவையுள்ள நூல்களை எழுதியிருக்கின்றனர். இக்கதைகள் தேசாபிமானம், கற்பு, சகோதரப்பான்மை, சமரஸப்பான்மை முதலிய நற்குணங்களைப் போதிக்கவல்லன. அப்பேர்ப்பட்ட புஸ்தகங்களை அதிகமாக நாம் அக்களஞ்சியங்களில் தருவித்து அவற்றையே நம் சிறுவர் சிறுமிகள் வாசிக்கத் தூண்ட வேண்டும். இம்மாதிரியான புஸ்தகாலயங்கள் (Library) இலவச வாசகசாலைகள் (Free Reading Room) கண்காக்ஷிச் சாலைகள் (Museums) ஆகிய இவைகள் ஒவ்வொரு சிறு கிராமத்திற்கும் ஓர் சிறந்த அணிகலனுவதுடன், தேசமுன்னேற்றத்திற்கு இவை அடிப்படையாய் இருக்கின்றன. அறிவாளர்களின் ஊக்கத்தாலும், தனவான்களின் பேருதவியினாலும், கவர்ன்மெண்டாரின் ஆதரவாலும் இவ்வித இலவச வாசக நிலையங்கள் நாளடைவில் எங்கும் உதித்து விளங்க எல்லாம்வல்ல ஈசன் கருணைபுரிவாராக.

———:0:———

மணம்—IV.

[காஞ்சி—வாசுதேவ ஐயர், தமிழ்ப்பண்டிதர்,
போர்டு ஹை ஸ்கூல், கிருஷ்ணகிரி.]

(218-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

அஷ்டாவக்ரர் காதையை ஆழ்ந்துணர்ந்தோர் மணத்திற்கு முன் மனத்தூய்மை அடைந்திருத்தல் வேண்டுமெனவும், மணம் சிற்றின்பத்தின்பாற் பட்டதன்றெனவும், அஃதோர் வீடுபேற்றிற்குரிய நிவர்த்திமார்க்கமெனவும் நன்கு அறிவர். அத்தகைய உயரிய ஒழுக்கத்தை ஆன்றோர் பிரமசரியத்தால் பெற்றனர். அந்நிலை முற்றுங்கைவரப் பெற்றோர்பால், அயலான் மனைவியை அன்னைபோல் கருதல், காமத்தைத் தம்வயப்படுத்தல், சுவையடக்கம், நாவடக்கம், பணிவுடைமை முதலிய அருங்குணங்கள் திகழ்ந்து விளங்கும்.

மேனாட்டு நாகரீகப் பொறியில் சிக்குண்டு, உலோகாயதக் கொள்கையில்வீழ்ந்து அத்துறையினூடே கல்வியைப் போதித்து வரும் ஆசிரியரிடமாவது, அவ்வாசிரியரை அடுத்து வழிபாடு செய்துவரும் மாணவரிடமாவது பிரமசரிய முதலிய ஒழுக்கங்கள் அருமபுவது அருமையினும் அருமை. காரணமென்னை யெனின், தற்காலப் படிப்பின் போக்கு மனவொழுக்கத்தை மாற்றும் வன்மையின்று. பலர் "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்னும் முதுமொழியைப் புறத்தொதுக்கி, காமவெறித் தலைக்கேறிப் பேதுற்றுழல்கின்றனர். தற்காலத்தில் மாத்திரமன்று; முற்காலத்திலுங்கூட "கற்றபின் நிற்க அதற்குத்தக" தம்மினுங் கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா மெற்றே யிவர்க்கு நாமென்று" என்னும் நீதி நெறியைக் கடந்தோரிடத்து, மிகத் தீமையே விளைந்திருத்தல் காணலாம். அதை விளக்கிக்காட்ட ஆத்ம புராணத்தில் சாந்தோக்கிய உபநிடத முரைக்கும் அத்தியாயத்தில் திகழ்ந்து விளங்கும் கதையொன்றுளது. அதாவது,

சுவேதகேதுவென்னும் இருடிபாலகன் ஒருவன் இருந்தான். அன்னவனிடத்தில் தாய் தந்தையர் மிகவும் பிரியமாயிருந்தனர்.

அவன் செய்யும் துடுக்கான செய்கைகளைக் கண்டித்து நல்வழிப் படுத்தாமல் பிரியத்தால் பாராமுகமாயிருந்துவிட்டார். அவன் பன்னிரண்டு வருடம்வரை குலவொழுக்கத்தின்படி உபநயன மற்றவனானான். மங்கையரைக்கண்டு எள்ளி நகைத்தல், மறையவரைக் கடுமொழியால் வைதல், பசுவினங்களைத் தடிகொண்டு புடைத்தல் முதலிய கொடுஞ்செயல்களைச் செய்யத் தலைப்பட்டான். இவ்வாறு பாலியத்தில் விடலைபோல் திரிவதைக் கண்ணுற்று பிதாவானவர் மிகவும் விசனமடைந்து "ஏ! அருமந்த புதல்வ! அவிவேகத்தாலுண்டாகிய ஆசையால் யாங்கள் நின் செய்கையைக்கண்டு வெறுத்துக் கண்டியாமல் சீராட்டிப் பாராட்டி வளர்த்தமையாலன்றோ, நீ உன்மத்தங்கொண்டுழல்கின்றனை? நீதி நூலோர் கூற்றின்படி* தாய் தந்தையர் மகனை நல்வழிப்படுத்தும்பொருட்டுச் சிட்சிக்க 3 வருடம் வரை தாயும், 8 வருடம் வரை தந்தையும், 16 வருடம் வரை ஆசிரியரும், அதற்குப்பின் இன்சொல்லாலும் செம்மைப்படுத்தவேண்டுமென்றிருப்பதால், நாங்கள் இருவேமும் சிட்சிக்காத தோஷத்தால் இத்தகைய ஒழுக்கமற்றவனாயினை? இனிமேல் உபநயனஸமஸ்காரஞ்செய்து திருத்துவது முடியாததேயாம். நேயவயத்தானாகிய என்பால் நினக்குச் சிரத்தையுண்டாகாது. சிரத்தையில்லானுக்குக் கல்வியைக் கற்பித்தல் இல்லிக்குடத்தில் நீர் பெய்வதுபோன்றாம். வேறொரு குருவினிடமாவது சென்று வேதியர் குலத்திற்குரிய வேதங்களையும் வேதாந்தத் தத்துவங்களைக் கூறும் உபநிடதார்த்தங்களையுங் கற்றுத் தெளிதி! பிரமசரிய வொழுக்கத்தைப் பெறாயாயின் அதிகத்துன்புறுவாய்! நீ என் குலத்திற்றோன்றி என்னையும் என் முன்னோர்களையும் அபகீர்த்தி அடையச் செய்தாய்! மானம்வரின்மேலோர் உயிர் தரியார். அடியேன் (நின் நேயவயத்தால்) உயிர் அகலாதிருக்கின்றது. என் கண்முன் நில்லாதே! செல்!" என்று கடுந்துரைத்தார். இச்சொல்லைச் சுடுசரம்போல் செவிமடுத்த மகன்

---

* தற்காலப் பெற்றோர்களிற் பெரும்பாலோர் தம் புத்திரர்கள் தூர்த்தனாயிருத்தல, பீடி, சிகரெட்டு முதலியன பிடித்தல், கண்டவிடத்தில் மனம்போனபடி புசித்தல், முதலிய துரைகளைச் சீர்திருத்துவதைவிட்டு, பாரத மாதாவுக்குத் தொண்டுசெய்தல், நூல் நூற்றல், கதராணிதல், வாதட்சணையை வெறுத்தல் முதலிய நன்மார்க்கங்களைக் கண்டிக்கின்றனர்.

தாய் தந்தையரைவிடுத்து வேறோர் ஆசிரியரை அடுத்து நான் மறையை யோதத் தொடங்கினன். ஆங்கு இராவணனைப் போல் மறைகளை யோதக் கற்றனே யொழிய மனோலயத்தை மாண்புறத்தெரிக்கும் உபநிடதக்கருவார்த்தத்தை நுனிந்தறிய வில்லை. முற்று முணர்ந்தவனைப்போல் ஆசிரியரைவிடுத்துத் தந்தையின் ஆசிரமத்தை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில்,

"யான் பல் கலைகளிலும் மிக்க பயிற்சியுடையேன். யான் வேதமோதுவதுபோல் என் தந்தை யோதார். அவ்வாறு ஓத வருமாயின் என்னையேன் வேறொரு குருவின்பால் அடையச் செய்தனர். ஆகையால் தந்தையினும் மிகக் கல்வியுடையேன். தேவகுருவாகிய வியாழ பகவான் மகன் அஜன் என்பான் அசுர குருவின்பால் சென்று மிருத்தியுசஞ்சீவினி என்னும் அரிய கலையைக் கற்றுப் பிதாவுக்குப் படிப்பித்தான். அத்தகையானைப் போல் யான் உள்ளேன்" என்று எண்ணி இறுமாப்புற்றான். அச்செருக்கால் பிதாவை வணங்காமல் பனமரம்போல் நின்றான். பிறகு தனயனுடைய தன்மையைக்கண்டு தந்தையானவர் மிகப் பொறுமையுடன், ஏ! மைந்தனே! இவ்வாறனக் கருவத்தை எவ்வநிசயத்தால் அடைந்துள்ளாய்! 'பல கற்றோம் யாமென்று தற்புகழவேண்டா—அலர் கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்—சில கற்றார் கண்ணுமுளவாம் பல கற்றார்க்கு—அச் சாணி அன்னதோர் சொல்' என்பதை யுணர்ந்தனையா! 'நூல் பல கற்றேனேனும் பொருள் நுனித்தறியானென்னின்— மாலொடும் வாளாகத்துமாநிறக் காகம்போல்வ—எல்வுறக் கற்ற நூலின் பொருள் தெரிந்திரு நூல் சொன்ன—சீலமே யொழுகு கின்றோன் சிவனடி நீழல் சேர்வான்' என்பதை ஆசிரி யரையடுத்துக் கற்கவில்லைபோலும்! ஆணவமுனைப்பை அழிக்க முய்வதன்றோ கற்றதனாலாய பயன்? சப்தாநுகரண யந்திரத்தைப்போல் (Gramaphone) (கிராமபோன்) ஓதக்கற்றாய் போலும். அதனாலன்றோ நீ மனோலயமுறவில்லை' என்று நன்னெறியுறும் படி தெளிவித்தார். பிறகு அவன் பிதாவின் உபதேசத்திலீடு பட்டுத தம் குற்றத்தை யுணர்ந்தவனாய்ப் பன்மடங்கு ஊக்கத் துடன் வழிபாடுசெய்து பரம்பொருளின் சொரூபத்தை நன்கு கேட்டுத் தெளிந்து நற்கதியடைந்தான். அத்தகைய சுவேத கேதுவைப்போல் பாடசாலையை விட்டு வெளியேகும் மாணவர் களின் மனநிலை யுள்ளது. இப்பொழுதுதான் பணடைய

உயரிய நிலையை (சாந்தமே உருவெடுத்த காந்தி அடிகளின் உபதேசத்தால்) உணர்ந்து வருகிறார்கள். இனிமேலாவது வாலிபர்களை பண்டை முறைப்படி பிரமசரிய வாழ்வில் நெருங்கச்செய்தல் வேண்டும். முதலில் மாணவர்கள் மனத்தில் தூய்மையை உரம்பெறச்செய்யவேண்டும். அந்நெறி யடைவதற்கு நாவின் சுவையைக் குறைத்தலேயாம். பதார்த்தங்களின் இச்சையை யடக்க இயலாதவர்கள் யௌவன பருவத்தில் புலனிச்சையை அடக்கமுடியாது. ஏற்கெனவே, இவ்வாழ்க்கையுற்ற ஆடவர் பெண்டிர் பெரும்பாலோர் நான்முறைகடந்து காமவெறியினால் சிற்றின்பத்திலாழ்ந்து அல்லலுறுகிறார்கள். இவ்விஷயமாகப் பெண்டிரைவிட ஆடவர் பெரும்பாவிகளாகவேயிருக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் பிதாவும் புதல்வனும் ஒரே இடத்தில் போகந் துய்ப்பதை அகஸ்மாத்தாய்க் கண்ணாரக் காஞ்சியில் கண்டோம். மனம் துடிக்கின்றது! என்னே காலக் கொடுமை! மஹாத்மாகாந்தி பிரமசரியத்தைப் பற்றிப் பேசுமிடத்து, மணஞ்செய்துகொண்ட கணவனுக்கும் மனைவிக்கும் சந்ததியுண்டாகவேண்டுமென்று விருப்ப முதிக்குமிடத்து நாலைந்து வருடங்களுக்கு ஒருமுறை பிரமசரியத்திற்குப் பங்கஞ்செயின் சிற்றின்ப வலையிலிடுபடார் என்று கூறுகின்றார். யௌவன வயதினர் மிளகாய், கடுகு முதலிய சாமான்களை விலக்கல்வேண்டும். அவ்வாறு சுவையின் இச்சையை அடக்குவது கடினமென்று அறிந்தபோதிலும், அத்துறையில் அணுகத்தான் வேண்டும்.

நாம் பிழைத்தற் பொருட்டு ஆகாரம் உட்கொள்ளுகின்றோம். நாம் சுகத்திற்காகக் காற்றை உட்கொள்ளவில்லை. மூச்சுவிடுவதற்காக உட்கொள்ளுகின்றோம். தாகவேட்கையைத் தணித்தற்பொருட்டுத் தண்ணீர் பருகுகின்றோம். இவ்வாறு நம் மனத்தைப் பழக்கிவிடின் மிகவும் எளிதில் மற்றவை கைகூடும். பிறப்பாகிய கடலைத்தாண்ட பிரமசரிய மொன்றே சாதனமாம். பிரமசரியம் இப்பிறப்பின்கண் நோயற்ற தன்மையும் பேரறிவினையும் விளைக்கும். ஐம்புலன்களைப் பூரணமாய் அடக்கவிரும்பின் தனசமெலிவுறுதலைக்கண்டு அஞ்சுதல் கூடாது. யாக்கையிடத்துள்ள பற்றொழிந்தால் ஸ்தூலபலத்திலுள்ள பற்றொழியும். உண்மையான பிரமசாரியிடத்து ஆத்மசக்தி மிளிர்ந்தொளிரும். சம்போக சாதனமாகிய கருதல், நகைத்தல், புகழ்தல், நோக்கல், தனித்துறைதல் அல்லது இரகசிய குறிகளைப்பற்றிப் பேசல், ஊடல், கலத்தல் என்னுமேழும் மைதுனமென்பர்.

வடமொழியாளர் அவற்றை ஸ்மரணம், கீர்த்தனம், கேலி, பிரேட்சணம், குகியபாஷணம், சங்கற்பம் என்று பெயரிட்டுரைப்பர்.

மகளிரை அகத்தே நினைத்தல் ஸ்மரணமாம். அவர்களைப் புகழ்ந்து வருணித்தல் கீர்த்தனமாம். அவர்களோடு சொக்கட்டான் ஆடுதலும் பரிகசித்தலும் கேலியாம். இச்சைகொண்டு நோக்கல் ப்ரேட்சணமாம். தனியிடத்துறைந்து உரையாடல் அல்லது மர்மதானங்களை வருணித்தல் குகிய பாஷணமாம். அவர்களை ஊடுவேன் என்று உன்னுதல் சங்கற்பமாம். அவ்வாறே சம்போக செய்வேனென்று உறுதிகொண்டு நடத்தல் அத்தியாவசாயமாம். இவைகள் யாவும் மகளிர் விருப்பத்திற்கேதுவாதலால் குருவின்பால் நின்றோதும் மாணவன் உறுதியாய் கடைப்பிடித்துக் களையவேண்டும். இல்லையேல் நானுவகை யோனிகளைத் திண்ணமாய் அடைவன். அவன் உள்ளக்கமலத்தில் வீற்றிருக்கும் ஜோதி, அன்னவனுக்கு இருள் மூடியே காணும். சமீபத்திலிருக்கினும் ஒருபோதும் புலப்படுவதின்றாம். கடையில் பாவச் செயலில் ஈடுபடுவன். பரிபூரண பிரமசரியத்தையடைய முடியாமல் இல்லறத்தை விரும்பும் பிரமசாரி தாம் முன் கடைப்பிடித் தொழுகிய சில அநுபோகங்களால் அவ்வறத்தை (கிருக தர்மத்தை) தூய்மைபெற நடத்துவன். அத்தூய்மையை வீடுபேற்றிற்குரிய மார்க்கமெனக் கருதுவன். அந்நிலையுள்ளோன் மணமே மணம் பெறுமென்க.

:0:

ஸ்ரீ ஜகத்குரு மகாத்மியம்.

[கே. ஜி. முனிசாமி நாயுடு, கிருஷ்ணகிரி.]

(206-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

3. நாஸ்திகபங்கம் :—

நாஸ்திகர்கள் யாவரெனின், சார்வாகர் (லோகாயதர்) முதலிய வேத விரோதமான மாக்களே நாஸ்திகர்களெனப்படும்

நாஸ்திகர்கள் :—

அ. ஈஸ்வரனில்லை. ராஜனே பரமேசுவரன்.

ஆ. எங்ஙனம் பரமேஸ்வரன் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடும்? கூடாமை.

இ. பிருதிவி முதலிய பூதங்கள் தத்துவங்களாம். தேகாகாரமாய்ப் பரிணமத்தையடைந்த பரமாணு வடிவான அந்த பூதங்களினின்றும், வெற்றிலையாதி மூன்றும் சேர்ந்ததால் மதசக்தியுண்டாதல் போன்று சைதன்னிய முண்டாகின்றது; அதுவும் நாசமடைகின்றது.

ஈ. ஸ்திரீகளின் ஆலிங்கன முதலியவற்றாலுண்டாகுஞ் சுகமே புருஷார்த்தம்.

உ. அக்னிஹோத்ரங்களும், வேதாத்யயனமும், சந்நியாசமும், விபூதி தாரணமுமாகிய இவை புத்தியும் புருஷத்தன்மையுமற்றவர்கட்கு ஜீவனோபாயமாம்.

ஊ. சுவர்க்கமில்லை, மோக்ஷமில்லை, பரலோகமில்லை, ஆத்மாவில்லை வர்ணாச்ரமாதி கர்மங்கள் பலனைத்தராவாம். தேக நிவர்த்தியே மோக்ஷமாம்.

எ. ஜோதிஷ்டோமயாகத்திற் கொல்லும் பசு சுவர்க்கத்தையடையுமானால், யாக கர்த்தா தன் தந்தையை ஏன் அங்குக் கொல்லக்கூடாது?

ஏ. சிரார்த்தத்தில் பிதுர்களுக்குத் திருப்தியானால் வழி நடைக்கு கட்டுசாதமேன்? என்பது போன்ற பல கொள்கைகளையுடையவர்கள்.

இவ்வாறுய கொள்கைகள் உலகில் பரவியதால்; தர்மதேவதை சலிதது முக்காடிட்டுத் தூங்கவும், மூதேவி ஓயாது நடித்துவரவும் நேர்ந்தது. புண்ணிய வுலகை நாடி அவதரித்த பட்ட பாதர் 'பாட்டப்பிரதிபம்' என்னும் பூருவ மீமாம்ஸை நூலைச்செய்து பல மாணாக்கர்களைப் பயிற்சி செய்வித்து, பௌத்தர் நூலையுணர்ந்து, அவைகளுக்கு மறுப்பெழுதிப் பிரசுரித்துக் கொண்டும், பிரசங்கித்துக்கொண்டும் திக்குகள் தோறும் சுற்றி வெற்றிக்கொடியுடன் சுதன்வராசன் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார். அவ்வரச சபையில், பஞ்சமர் நாட்டையாளும் பத்பநாபயதிந்திரன் சபையில் கோபாலன் ஜீவயாதனு வடிவமாய் பிரகாசித்தவாறு, நாஸ்திகர் சூழ்ந்துள்ள அவையில் அரசனுடன் ஸ்ரீ பட்டபாதாசாரியர் பொற்பீடத்தில் கேசரியென வீற்றிருந்தார். அச்சபையில் வீற்றிருந்த சடபிஞ்ஞன் (புத்தன்)

பட்டரிட சில மொழிகளால் சீறி வாதமிடலாயினன். அப்போது சீறிய நாகனை அடக்கும் கருடன் போன்ற குமாரில பட்டர் :—

1. வேதங்களால் புகழும் கடவுள் ஒருவரிருக்கிறார். அவரையே நாராயணன், பரமேஸ்வரன் என்று பற்பல வகையால் வணங்குவது. அவர் மும்மூர்த்தங்களுக்கும் மேலானவர்; திரிலோகங்களாலும் பூஜிக்கப்பட்டவர். கடவுள் = ஞானமயமான விரிந்தபொருள். அவரை பிரமாணத்தா (Means of Kuowledge)ல் உணரக்கூடும். பிரமாணம் = அளவை.

2. கடவுளைச் சற்குருவாயிலாயும், சாஸ்திரவாயிலாயுமுணர்ந்த யோக நிஷ்டாபரருக்கே முக்தி கிட்டுமென்பது வேத சம்மதம்.

3. தத்துவம் = பரவஸ்து. முடிவான ஏகவஸ்துவை விளக்கவேண்டி (தூலாருந்ததி நியாயம் போன்று) அவயவாதிகளையும் தத்துவங்களென பண்டிதர்கள் மாணவர்களுக்கு விளக்கினார்கள். முடிவான வஸ்துவையே வேதமுணர்த்துகிறது. சத் = சத்திய வஸ்து. 'சத்தியம் திரிகாலாபாதிதம்' அது மூன்று காலங்களிலும் நாச (பாத) மற்றது; அதை (சத்—சித்—ஆனந்தம்) சச்சிதானந்தம் என்று அவ்வியாப்தி முதலிய தோஷங்களற சாஸ்திரங்கள் போதிக்கின்றன. (விரிக்கிற் பெருகும்) என்பதாதி பிரமாணங்களால் நாஸ்திகரை மறுத்ததாகும். இங்ஙனமே பூர்வமீமாம்ஸையையும் வாதில் நிலை நாட்டினார். பின்னர் பட்டபாதர் (ஸ்ரீ குமாரதேசிகர்) அரசனது ஆஞ்ஞையை மீறுது மலை மீதிருந்து குதித்து நாஸ்திகர் தோல்வியடைய வேதத்தையும், வேதநாயகனையும் நிலைநாட்டினார். முடிவாய் மற்றொரு பிரதிஞ்ஞையேற்படவே, சுரேசுவரர் (பட்டர்) அரசனால் குடத்தில் அடைக்கப்பட்ட கருநாகப்பாம்பை புத்தர்கள் பாம்பென்று சொல்லியதற்கு மாறாகக்குடத்தில் 'அநந்தசயனராகிய விஷ்ணு இருக்கிறார்.' அவரைத்தான் வேதங்கள் துதிக்கின்றனவென்று பேசிக் குடத்தில் கைவிட்டு விஷ்ணு விக்ரகத்தை எடுத்துக் காட்டினார். அச்சமயம் தோல்வியடைந்த புத்தர்கள், அரசனது தண்டனைக்குப் பயந்து அரசனை வேண்டியும் கேளாமலரசன் அசரீரி வாக்கைத் தழுவி நாஸ்திகர்களான பாலர்முதல் விருத்தர் வரை யாவரையும் கற்காணத்திலிட்டுக்கொல்ல உத்திரவிட்டார்.

உடனே அரசபரிவாரங்கள், சாருவாகர், புத்தர் முதலிய நாத்திகர் யாவரையும் கற்காணத்திலிட்டு அரைத்து பிரளயமாக்கிவிட்டார்கள். தேவதுந்துபி முழங்கிற்று. தர்மதேவதை துந்துபி முழக்கத்தால் விழித்து புத்துயிர் பெற்றனள். புதர்களிலும் குகைகளிலும் பதுங்கியிருந்த ஆஸ்திக சிகாமணிகள் வெளிவந்து வேதநாயகனைப்போற்றி வாழ்த்தினார்கள். ஸ்ரீ சுப்ரமணிய பெருமான் பூர்வ மீமாம்ஸவல்லவராய் பிரம்மாவதாரமாகிய மண்டனமிசிரரை மாணக்காராகப் பெற்றிருந்தனர். இனி இப் புண்ணிய உலகிற்கு ஞானச் செல்வத்தை அளிக்க எம்பெருமான் திருவுளங் கொண்டார். (தொடரும்.)

:0:

திருக்குறளின் அரசியல் தோற்றம்.

[By Mr. T. P. Manikkavasagam Pillai in 'Justige' of 9—10—1924.]

கடத்தூர் V. S. கஞ்சமலே மொழிபெயர்த்தது.

உலகம் போற்றும் திருக்குறள் என்னும் நூல் தெய்வப் புலமை திருவள்ளுவநாயனர் அவர்களால் இயற்றப் பெற்றது' சென்னைக்கடுத்தாற் போலுள்ள மைலாப்பூரே அவரிட இருப்பிடமாக இருந்திருக்கவேணுமென்று நம்பப்படுகிறது. மதுரை த்தமிழ் சங்கத்திலும் பாண்டியன் முன்பாகவும் தம்முடைய திருக்குறளை அரங்கேற்ற மதுரைக்கு திருவள்ளுவர் சென்றதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழர் தம் சொந்த நீதி நூல் ஒன்றை ஏற்படுத்த இச்சித்து பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே திருவள்ளுவர் தம் திருக்குறளை இயற்றினதாக கர்ணபரம்பரை வழங்குகின்றது. இதற்கு முன்னரே திருவள்ளுவர் தமிழ் நாட்டில் நன் மதிப்புள்ளவராக இருந்திருக்கவேண்டும். இன்றேல் அவரை இப்பெருங் காரியத்தினைச்செய கேட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள். ஆயினும் அவரிட வேறு நூற்களை அறிந்திட வழியிலது.

பழமொழி போன்ற நீதி செய்யுட்களின் திரட்டே திருக்குறள். அதன் ஆசிரியர் தாராள மனதுடையவர். தம் சுய அறிவினாலேயே ஆராய்ந்தறிபவர் என்பது அவர் தம் நூலினின்றும் அறிகிறோம். உண்மை அறிவே உவகைக்குகந்தவழியாகும் என்பதவர்தம் கொள்கை. பல்வேறு சமயத்தினரையும் ஒன்றுக்கும் எண்ணத்துடனேயே அவர் தம் நூலின்கண் மதப் பிரிவினையை விளைவிக்கும் விடயங்களை விடுத்து பொதுவாகவே இயற்றியுளார். திருக்குறள் செய்யுட் புலமையின் மேம்பாட்டினால் மேன்மையுற விளங்குகின்றது. குறள் என்பது சுருங்கிய ஈரடியினால் முற்றுப்பெற்ற ஓர் அனுபவ உணர்ச்சியை நன்றாக உணர்த்தும் பாவாகும். திருக்குறளை வெள்ளி வலையில் உறையாக பொற்பழமாக கொள்ளுதல் வழமை. அதன் சுருக்க அடக்கம், பெருந்தமிழ்ப் புலமைச் சொற்களாக, சொற்பொழி வாற்றலுக்கு ஏற்றதாக விளங்குகின்றது. திருக்குறள் பொதுவாக நீதிக் கவிகளின் பொறுக்கிய பொழிப்பாகும்.

குறள் என்பதன் பொருள்.

குறள் என்பதன் இலக்கிய அர்த்தம் சுருக்கும் என்பது. அந்த சொல்லை தமிழ்மொழியின் குறுகிய பாக்களுக்கு இட்டழைப்பது வழக்கம். சமஸ்கிருதமொழி கலப்பின்றி தனித் தமிழ்மொழியில் இயற்றப் பெற்றது திருக்குறள். வடமொழி, தென்மொழி என்னும் பாகுபாடுகளே, சமஸ்கிருத பண்டிதர் கருதும் வண்ணம் தமிழ் சமஸ்கிருதம் மொழியின் கிளை அன்றென்பது வெள்ளிடைமலை. தமிழ் பெரும் அகராதியையும் தெளிவும் தத்துவமும் பொருந்திய இலக்கிய இலக்கணத்தினையும் உடைய தனித் தமிழ்மொழி என்பது தெளிவு. தமிழ் தென்னிந்திய மொழிகளின் தாய் என்பதும் வடமொழியின் தோழன் என்பதும் உறுதி. புராதனமானதும் தனி மொழியில் இலங்குவதும் ஆகிய நூல்களில் திருக்குறளை நன்கு ஆராய்ந்த வெளியீடு என்றும் தெளிவுபெற விளங்கும் நூல் என்பதும் அதனை 'களங்கமிலாத தமிழின் மேன்மை' என சொல்வதும் பொருந்தும்.

திருக்குறளின் காலம்.

திருவள்ளுவனாரின் காலம் திட்டமாய் நிர்ணயிக்கப்பெறு விடினும் அவர் கடைச்சங்க காலத்தில் இருந்தவர் என அறியப் படுகின்றமையின் கிறித்தவ சகாப்தம் முதல் நூற்றாண்டு எனவே கொள்ளப்படுகின்றது.

அமைப்பு.

திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 பாக்கள் அடங்கி யது. மூன்று பாகுபாடுகளாக—மானிடர்களின் முக்கிய இல ட்சியமாகிய—அறம், பொருள், இன்பம் என பிரிக்கப்பட்டு ஆக்கப்பெற்றது. எம்மதத்திற்கும் சம்மதமான கொள்கைகளை தன்னுள்ளடங்கப்பெற்றதாகலின் சைவ, வைணவ, புத்த, ஜைன மதத்தாரெல்லோராலும் புகழப்படுகின்றது.

பொருட் பாகுபாடுகள்.

அறம், பொருள், இன்பம் எனப் பெறும் முதல் மூன்றினை பொதுவாகவும் வீடு என்னும் நான்காவதினை தோன்றாப் பொரு ளாகவும் கொண்டுளது. அறம் 34 அதிகாரம்—இல்லறம் இரு பது அதிகாரம்—துறவறம் 13 அதிகாரம்—ஊழ் ஒரு அதிகாரம் ஆக விளக்கப்படுதல் தெளிபு.

பின்னர் சமூக வாழ்க்கையைப்பற்றிய அரசியலின் தன்மை கூறப்படுகிறது. திருக்குறள் ஆரியர், தமிழர் இவர்களின் நாக ரீக ஒற்றுமையை அறிவிப்பது. தென்னிந்திய மக்களின் சமூக வாழ்வின் பேம்பாட்டை விளக்குவது. நியாயமான அரசின் செங்கோலினால் அறமும் கல்வி எங்ஙனம் பெருகுகின்றதென் பதனை விளக்குவது. ராஜவிசுவாசத்தினையும் அதன் பயனையும், மந்திரிகள், ஒற்றர், தூதர் இவர்களின் தன்மையைப்பற்றியும் விளக்குவது. அரசியல் ஞானம் வெறுங் கற்பனையாக விராமல் அனுபவத்திற்குரியதாய்த் திகழ்வது அருமையினும் அருமை.

அரசரும் மந்திரிகளும்.

அரசின் தன்மையைப்பற்றி திருக்குறள் சொல்லுவதாவது:

வேலன்று வென்றிதருவது மன்னவன்
கோலதூஉங் கோடாதெனின்.

நல்ல தாராள மனதுடையவர்கள் அஞ்சி விலக்கவேண்டிய கொடுங்கோன்மையைப்பற்றி வள்ளுவர் விவரமாக உரைக்கின்ருர். கொலைகாரனைவிட கொடுங்கோல் மன்னன் கெட்டவன். மந்திரி செயல்வகை, காலம் இடம் அறிந்து செயக்கூடியவனே உண்மையான மந்திரி. மேலும் அம்மந்திரி ஊக்கத்திலும், குடிகளை ஓம்பச்செய்வதிலும் நிலைபெற்ற குணத்தினையுடையவனய் இருத்தல் அவசியம். மந்திரி தன் திட்டங்களை நன்கு கவனித்து தீரயோசித்து சீராய் நடத்தல் வேண்டும். அந்நியநாட்டு தூதரின் யோக்கியதை, நாகரீகம், தர்ம குணம், உயர் குடிப் பிறப்பு, உபசரிப்பு, மரியாதை என்பனவையேயாகும். அவன் இயற்கை அறிவுள்ளவனுகவும், கவரத்தக்க உருவம், ஆர்வம், வாக்குவன்மை உடையவனுகவும் இருத்தல் வேண்டும்.

அரசியல் அமைப்பு.

திருவள்ளுவநாயனரின் வாசகப்படி கோட்டை, வருமானம், சேனை, சினேகிதர், நேச தேசத்தார், தொத்துவியாதிகள் இன்மை, வஞ்சகரின்மை ஆகியவைகளேயாகும்.

வருமானம்.

அரசிறை என்பது வரி, கடற்சுங்கம், பொக்குடம், சுரங்கம், ஜெயத்தில் கிடைத்தவை ஆகியவைகள்.

சேனை.

வீரம், யூகம், வெல்லமுடியாத தன்மை உள்ள தலைவர்களால் நடத்தப்பெற்ற சேனைகள் இருந்ததாக திருக்குறள் கூறுகிறது.

வீரமின்மையைப்பற்றி அரசர்க்கும் தலைவர்க்கும் எச்சரித்து அதனை மிகவும் வெறுக்கிருர். பெண்வழி சேரலை அருவருக்கிருர். குடி, ஒழுக்கக்கேடு, சூது, இவைகளைப்பற்றி அருவருப்பை அவருக்கு மிகுதி.

மேல் சொல்லப்பெற்றவைகளினுல் தமிழர் பூர்வத்தில் தானே எவ்வளவு அரசியலிலும் நாகரீகத்திலும் மேன்மையுற்றிருந்தனரென்பது தெள்ளிதின் விளங்கும்.

அறநிலைச் செல்வர்காள்!

திருவாளர்பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற மேற்குறித்த வியாசத்தினை கண்ணுற்ற யான் அதன் நுண்பொருள்களை தர்மபோதினியை படிக்கும் தமிழர்களுக்கு விளக்கி எழுத முன் வந்தேன். மேல்குறித்த வியாசம் சிறியதேயாயினும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்பதனுள் அடங்கியது. திருக்குறள் மாண்பினை விளங்க எவ்வளவு எழுதினும் போதாதென் பது வெளிப்படை. திருக்குறள் என்பது தற்காலம் உலகத்தி லுள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல மதத்தினராலும் தம்முடையதென சொல்லிக்கொள்ளும் பெருமைவாய்ந்தது. காலஞ்சென்ற மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார் 'பைபிலு'டன் இதனையும் தினமும் வாசித்து வந்ததாக சொல்லப்படுகின்றது. இதனை வாசித்த எவர்களும் இந்நூலினையும், ஆசிரியரையும், மொழியினையும் வாழ்த்தாதார் இலர். இந்நூல் தமிழ்மொழியிலிருப்பதே தமிழ்மொழிக்கொரு பெருங்கீர்த்தி. இதனுள்ளடங்கப்பெற்ற விடயங்கள் பல்வேறு வகைப்பெற்றவை. உலகத்துள பல்வேறு லட்சம் புத்தகங் களின் கருத்துகளை இந்த ஒருநூல் அடக்கியுளது. ஒரு புலவர் 'மக்களுக்கு வேண்டிய அவ்வளவு விடயங்களும் இதனொன்றனுள் அடங்கப்பெற்றுளது' என்கின்றார். பல்வேறு மொழியினராலும் மதத்தினராலும் போற்றப் பெற்றுவரும் அவ்வரிய நீதிக்களஞ்சியத்தை, ஞானப் பொக்கிடத்தை, அறிவுத்திரட்டை தமிழராகிய நாம் மறத்தல் தகுதியோ. எஞ்ஞான்றும் அதனை வேதமாக ஓதி அதன் பயனை அடைதல் அவசியமின்றோ.

———:0:———

விக்கிரஹ ஆராதனம்.

———

[ரா. சுப்பிரமணியம், மதுரை.]

உலகத்தில் மானிடராய் உதித்தவர்களுள் பெரும்பாலர் விக்கிரஹாராதனம் செய்துகொண்டே வருகின்றனர். அவர்களுள் சிலர் அவ்வழக்கத்தைத் தவிர்த்துவருவதோடுங்கூட பிறரையும் அப்படிச்செய்யும்படி கூறிக்கொண்டிருக்கின்றனர். அப்படிச்செய்வது வெளித்தோற்றம். ஒன்றை எண்ணியேயல்லாது

வேறல்ல வென்று நன்கு விளங்குகின்றது. எங்கும் கடவுளிருக்கிறார் ஆலயத்துக்குச் சென்றுதான் கடவுளை வணங்க வேண்டுமோ வென்று சிலர் வாய்ஞானம் பேசுகின்றனர். அவர்கள் அறியாமையாலேயே அவ்வாறு சொல்லுகின்றனர் என்பது திண்ணம்.

விக்கிரஹ ஆராதனம் நியாயமே எனக் கூறுவோம்.

உதாரணமாக :—ஔவைப்பிராட்டியாரும் தான் அருளிச்செய்த கொன்றைவேந்தன் என்னும் நூலில், 'ஆலயந் தொழுவது சாலவு நன்' றெனக் கூறியிருக்கின்றார். ஆயினும் அவரும் விக்கிரஹ ஆராதனம் செய்யாமலிருந்திருக்கவில்லையென்று அன்னவர் சரித்திரத்தினின்றும் வெளியாகின்றது.

ஓர் நாள் ஔவைப்பிராட்டியார் விநாயகபூசை செய்து கொண்டிருக்கும் பொழுது சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமா நாயனாரும் தாங்கள் கையிலைக்கு பரமசிவக் கடவுளைத் தரிசித்துவரச் செல்லுவதாயும், பிராட்டியாரையும் தங்களுடன் வரக்கூடுமோ வெனவும் வினவ,—அதற்கு ஔவை சம்மதித்துத் தனது பூஜையை முடித்துவிட்டு வருவதாகக்கூறி விரைவாகப் பூஜிக்கத் துவக்கினரென்றும், அப்பொழுது விநாயகக் கடவுள் பிரத்யக்ஷமாகி ஔவையை நோக்கி—ஔவையே நீ ஏன் தினம் போலல்லாமல் இன்று விரைந்து பூஜிக்கின்றனை ? என்று வினவ, ஔவை தனக்காக நாயன்மரர்கள் காத்திருக்கும் விஷயத்தை யும், கையிலைக்குச் செல்லப்போவதையும் கூற, அன்னவர் மகிழ்ந்து, ஔவையே நீ அவர்களைச் செல்லும்படி விடைகொடுத்தனுப்பி விட்டு தினம் போலவே பதறாமல் பூஜைசெய்யென்றும் சொல்லி அவர்கள் சென்றபின் பூஜை முடிந்ததும் விநாயகர் தனது துதிக்கையில் ஔவையை யேந்திக் கையிலையிற் சேர்த்தனரென்றும்; அப்பால் நாயனார்கள் கையிலையையடைந்து, பூஜை செய்துகொண்டிருந்த ஔவை தங்களுக்கு முன்னமேயே வந்த விபரத்தை யறிந்து வியப்புற்றனரென்றும், அச்சமயம் ஔவை விநாயகர் மீது

மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினைய வல்லார்க்கரிதோ முகில்போல் முழங்கி
அதிரவருகின்ற யானையுந் தேருமதன்பின் சென்ற
குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குலமன்னனே,

என்று பாடினரென்றும் அன்னவர் சரித்திரத்தினின்றும் நாமறிகிறோம். ஆகையால் நம் முன்னோர் காலமுதலே இவ்விக்கிரஹாராதனம் நடந்துகொண்டு வருகின்றதென்று நன்கு விளங்குகின்றது. விக்கிரஹாராதனம் செய்த பிராட்டியாரும், இன்னும் எத்தனையோ பெரியோர்கள் எவ்விதத்திலும் மேன்மையடைந்திருக்கின்றனர். தவிர ஔவையாரும் மென்மேலும்—அவ்வருகக் கடவுள்மீது பக்திரஸம் பொங்கப் பற்பல பாடல்களையியற்றியருளியிருக்கின்றார்.

நிற்க—விக்கிரஹாராதனமில்லாத மஹான்கள் எத்தனையோ பேர்களிருக்கின்றனரென்று வாதாடுவோர் சிலரிருக்கின்றனர். ஆயினும் அவர்களுக்கும் விக்கிரஹாராதனம் அவசியமே என்று ஓர் சிறிய உதாரணத்தைக்கொண்டு கூறுவோம்.

எப்படியெனில் உலகிலுள்ள எவ்வகைச் சனங்களும் ஓர் அழகான பொருளின்மீது இச்சைகொள்ளுதல் சகஜமே. அதாவது ஈடுபடுவதால் பலவகைகளிருக்கின்றன: அவைகளில் கடவுளிடம் ஈடுபடுவதற்கு பக்தியென்றும், ஸ்திரீயினிடத்து ஈடுபடுவதற்கு மோகமென்றும், புத்திரனிடத்து ஈடுபடுவது வாத்ஸல்யமென்றும் இன்னும் பலவகைகளிருக்கின்றன. நம் பெரியோர்கள் நாம் கடவுளிடம் ஈடுபட்டு நற்கதியடையவேண்டுமென்ற எண்ணத்துடனேயே நமக்கு விக்கிரஹாராதனமென்னும் வழக்கத்தைக் கற்பித்திருக்கின்றனர். அவர்கள் நமக்கு ஏதாயினும் ஓர் உருவத்தைக் காண்பித்து இதுதான் கடவுள் என்று கூறினால் ஒருவேளை நம்பாமலிருந்துவிடக்கூடுமென்றே—நான்கு கரங்களுடையவர், பத்மபாதமுடையவர், சங்க சக்ர கதாதாரி, பீதாம்பரேயர் என்றும், இன்னும் ஜடாதாரி, பாதிமதியை யணிந்தவர் என்றும், சிவன் விஷ்ணு என்றும் பற்பல விதமாக அலங்கரித்துக் கூறுகின்றனர். அவைகள் மானிடனைக்காட்டிலும் அழகியனவாகக் காணப்படுவதால் நாம் அதனிடத்து ஈடுபட்டு நம்மையறியாத ஓர் பக்தியும் உற்பத்தியாகிறதும் தவிர நிர்மலமாகிய மனமென்னும் கண்ணாடி அவ்வுருவத்தைத் தன்னுட் பதித்துக்கொள்ளுகிறது. அச்சக்தியின் பெயரே அகக் கண்களால் அறிவதென்பது

அதெப்படியெனில்:—உதாரணமாக ஓர் மனிதன் பிறவிக் குருடனாக இருக்கிறானென வைத்துக்கொள்ளுவோம. ஓர்நாள் அவன் தனது நண்பனுடன் சப்பாஷித்துக்கொண்டிருக்கும் பொழுது ஓர் புஷ்பத்தின் வாசனை வீச, அவ்வந்தகன் அதென்ன

வாசனை என்றான். அதற்கு அம்மனிதன் அது ஓர் புஷ்பத்தினுடையதென்று சொல்ல, அந்தகன் புஷ்பமெப்படியிருக்குமென்று வினவுகிறான். உடனே அம்மனிதன் ஓர் புஷ்பத்தைக் கொய்து அந்தகன் கையிற்கொடுத்து இதுவோர் வெள்ளைப்புஷ்பமென்று கூறுகிறான். ஆயினும் அந்தகன் வெள்ளை எப்படியிருக்குமென அறிய விருப்புற்று வினவ அம்மனிதன் தெரிவிக்கக்கூடாமல் உனது கண்கள் ஒருதடவை தெரியுமானால் நீ அதன்நிறத்தை அறியலாமே யல்லாது அதன் நிறத்தை வாயால் அறிவிக்க முடியாதென்று கூறினான்.

அதுபோலவே கடவுளை யறியாதோரெல்லாம் அந்தகர்களே. ஆயினும் அவ்வந்தகன் வாசனையை விசாரித்த விதமே ஜனங்கள் கடவுள், கடவுள் என்று கூறும் ஒலியாகிய வாசனையைக்கொண்டு விசாரிக்க, அந்தகன் அறிந்த புஷ்பத்தைப்போல நம் பெரியோர் மூலம் நாமும்—நான்கு கரமுடையவர், சங்க சக்ர கதாதாரி என்றும் முன்கூறிய லக்ஷணங்களை அறிகிறோம். ஆயினும் அந்தகனுக்கு அவனது நண்பன் புஷ்பத்தின் நிறம் வெள்ளை என்று கூறியதைப்போலவே நம் பெரியோர்கள் நமக்கு இதன் உண்மை ஸ்வரூபம் வேறெனக் கூறுகின்றனர். குருடன் வெள்ளை நிறத்தை அறிய முயன்றது போல நாமும் உண்மை ஸ்வரூபத்தை அறிய முயலுகிறோம். அப்பொழுது நம் பெரியோர் நம்மை நோக்கிக் குழந்தாய் உன்னிடம் அகக்கண்ணென ஒன்றிருக்கின்றது அதைத் திறந்துகொள்ளவும் உன்னிடமே சக்தியிருக்கின்றபடியால் நீயே அதன் உண்மை ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளவேண்டுமே யல்லாது என்னால் அறிவிக்கமுடியாதெனக் கூறுவார்கள். ஆகையால் நண்பர்களே! இவையெல்லாம் எதனின்றும் உற்பத்தியாயினவென்று நோக்குங்கால் விக்கிரஹாராதனத்தினின்றே யென நாமறிகிறோம். நம்மனம் ஒருமைப்பட்டு, பின்னர் விக்கிரஹத்தின்மீது அன்பு தோன்றி, பக்தியாகமாறி, அப்பரம்பொருளிடத்தில் நம் மனம் ஈடுபட்டு வைராக்கியமடைந்து, இறுதியில் உலகத்தையும், உடலையும், அவைகளின் உற்பத்தியையும் அறிந்து மோக்ஷ சாதனத்தைப் பின்னரே அடைகிறான். ஆகையால் விக்கிரஹாராதனமே மோக்ஷ சாதனத்தின் அடிப்படை (அஸ்திவாரம்) என நன்கு விளங்குகின்றது. இவைகளை எண்ணியே ஔவையாரும் ஆலயந்தொழுவது சாலவு நன்றெனக்கூறினார். 'கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்' என உலகநீதியிலும் சொல்லினர். அப்படியாயின் விக்கிரஹ ஆராதனம்

அவசியமென்பதை நீதிகள் எம்மட்டும் உறைக்கின்றனவென்று நன்கு விளங்குகிறதல்லவா? ஆகவே இதற்கு மிஞ்சிப் பக்தி சம்பாதிக்கும் வழி வேறொன்றுமில்லையென்று உறுதியாய்க் கூறலாகும்.

———(0)———

தூக்கிவினைசெய்.

[சிரோமணி T. V. ஸ்ரீகண்ட சாஸ்திரிகள், ஆசிரியர், ஸமஸ்கிருத காலேஜ், கல்லிடைக்குறிச்சி.]

"ஆலோசனை செய்யாமல் ஒரு காரியத்தையும் செய்யக் கூடாது: ஆலோசனை செய்யாதிருத்தல் எல்லாத் தீங்குகளுக்கும் முக்கியமான காரணம்: குணங்களில் ஆசையுள்ள ஐஸ்வர்யங்கள், ஆலோசித்துச் செய்கின்றவனைத் தானே தேடியடைகின்றன." என்று பாரவி மகாகவி கூறியுள்ளார். இதையனுசரித்தே ஔவை பிராட்டியார்,

"தூக்கி வினை செய்,
நுண்ணியகருமமு மெண்ணித்துணி"

யென்று ஆத்திச்சூடியிலும், கொன்றைவேந்தனிலும் முறையே திருவாய் மலர்ந்தருளினர். ஆலோசிக்கப்படாமல் செய்யப்படும் காரியம் நன்மையை யுண்டுபண்ணாதென்று,

'Good and quickly seldom meet'

என்ற ஆங்கில நீதிமொழியால் தெரியவருகிறது. ஆகவே நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும், 'இதைச் செய்தால் நன்மை யுண்டாகுமா? தீமை யுண்டாகுமா? இதைச் சரிவரச்செய்ய நம்மால் இயலுமா? இயலாதா?' என்று நீர ஆலோசித்துச் செய்ய வேண்டும். அம்மாதிரி செய்தால், அநேகவித பாபங்களுக்கு உள்ளாகாமலும், பின் வருந்த நேரிடாமலுமிருக்கலாமென்பதை விளக்க ஈண்டு ஒரு கதை வரைவோம்.

கௌதமர் என்ற முனிவருக்கு அநேக குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் சிரகாரி யென்பவன் நுண்ணறிவுடையவன். எந்தக் காரியத்தையும் வெகுநேரம் ஆலோசித்த பிறகே

செய்வான். அதனுல் அவனுடைய பெற்ருேர்கள் அவனைச் *"சிரகாரி" யென்று அழைத்தனர். இவ்வாறிருக்க, ஒருநாள் கௌதமர் தன்னில்லாளாகிய அஹல்யாதேவியின் கற்புக்கு அழிவு ஏற்பட்டிருப்பதை யுணர்ந்து, சிரகாரியைக் கூப்பிட்டு "குழந்தாய்! உன் தாயார் கெட்ட குணமுள்ளவளாக இருக்கிருள். 'ஆதலால், இந்தக் கத்தியால் வெட்டிக் கொன்றுவிடு" என்று சொல்லி ஓர் பளபளப்பான கத்தியைக் கொடுத்துவிட்டு மிகுந்த கோபத்துடன் விரைவாகக் காட்டுக்குச் சென்ருர்.

தகப்பனுர் உத்திரவைத் தலைமேற்கொண்டு சிரகாரி பின் வருமாறு ஆலோசிக்கலாயினன். "தந்தை சொல்லைக் கடைப் பிடித்து நடப்பதும், தாயைக் காப்பாற்றுவதும் பிள்ளையின் கடமை. இச்சமயம் தந்தை சொற்படி நடப்பேனுகில், தாயைக் கொன்ற பாபம் என்னைச் சூழ்ந்து கொள்ளும். தாயைக் காப்பாற்றுவேனுகில், பித்ரு வாக்ய பரிபாலனம் செய்யாத பாபத்திற்காளாவேன். 'தந்தை சொன்மிக்க மந்திர மொன்றில்லை' யென்று ஆன்ருேர் கூறியுள்ளார். தந்தைதான் என்னை யுண்டு பண்ணி, படிப்பு முதலியவற்றைச் செவ்வையாய்க் கற்பித்தார். உலகில் 'காம்பானது தான் ஈன்ற பூவையும், மரமானது தான் ஈன்ற காயையும் நழுவ விட்டு விடும் ஆனுல் தகப்பன் தன் பிள்ளையை விடமாட்டான்' என்று பெரியோர்கள் கூறுவதைப் பன்முறை கேட்டிருக்கிறேன். அவ்வாறு பற்றுள்ள தந்தைக்குக் கைம்மாருக, அவர் வார்த்தையைக் கடைப்பிடித்து ஒழுகுவதே உத்தமப் புதல்வனின் கடமை.

ஆனுல் நெருப்புக்கு அரணிக் கட்டைபோல எனக்குக் காரணம் என் தாயே. குழந்தை சாமர்த்தியமுள்ளவனுக விருந்தாலும், இல்லாவிட்டாலும், அழகாயிருந்தாலும், அவலட்சணமாகவிருந்தாலும், பணமுள்ளவனுக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், அன்னையானவள், 'என் கண்ணேவா' என்று அன்புடனழைத்து அமுது படைத்துக் காப்பாற்றுகிருள். உலகில் பெற்ருேரில்லாத குழந்தையைத் தாயில்லாக் குழந்தை யென்று சொல்லுகிருர்களே யல்லாமல் தகப்பனில்லாக் குழந்தை யென்று கூறுவதை நான் கேட்டதில்லை. உலகில் பெண்மக்கள்

---

*சிரகாரி யென்ற வடமொழி பதத்திற்கு வெகுநேரம் ஆலோசித்துச் செய்கிறவன் என்று பொருள்.

கணவனைப் பதியென்றும், பர்த்தாவென்றும் அழைப்பது வழக்கம். அவைகளுக்கு 'பெண்மக்களை நல்ல வழியில் நடக்கும்படி செய்து அவர்களைக் காப்பாற்றுகிறவர்கள்' என்பதுதான் பொருள். என் தந்தையோ, என்தாயை—தன் மனைவியைக்—காப்பாற்றுமல் காட்டுக்குப் போய்விட்டார். இம்மாதிரி தன் கடமையைச் செய்யாத தந்தையின் சொல்லை நிறைவேற்று வதைப் பார்க்கிலும் நிறைவேற்றுமலிருத்தலே மேலானது. என் அருமைத் தாயை—பத்துமாதம் சுமந்து ஈன்று வளர்த்த தாயை—நான் கும்பிடும் தெய்வத்தைக்—கொல்ல என் மனம் துணியவில்லையே" என்று பலவாறு ஆலோசனைசெய்து இரு தலைக்கொள்ளி எறும்புபோல ஒன்றும் செய்ய இயலாமலிருந்தான்.

காட்டுக்குச்சென்ற கௌதமர், "ஆ! என்ன கோபத்தின் கொடுமை! கடுஞ்சினத்தையும தணித்துக் கொள்வதல்லவா சான்றோர்க்கழகு. முன்பின் யோசனை செய்யாமலும், தீர விசாரியாமலும் ஒன்றுமறியாத நாரீமணியைக் கொல்லும்படி என் புதல்வனுக்குக் கட்டளையிட்டேன். என்ன என் அறிவீனம்! என் குழந்தை தன் தாயைக் கொல்லும் சமயத்தில் எவ்விதம் மனம் வருந்தியிருப்பான்! எல்லாவற்றையும் தீர விசாரித்துச் செயுமியல்புடைய சிரகாரி இத்தருணமும் அம்மாதிரியே செய்வானுகில், எனக்கு நல்லுலகு கிடைக்கும்; என் மாதவங்களும் வீணே போகா; மைந்தனும் தாயைக்கொன்ற பாபத்தையடையமாட்டான். என் இல்லாளோ தானறிய ஒரு குற்றமும் செய்யாதவள். இந்திரன் அதிதி வேடம்பூண்டு ஆசிரமம் வந்தான். நான் அவனை முறைப்படி பூசித்து, 'அதிதியே! நான் உமக்குப் பணியாளன். என் இல்லத்தை நமது இல்லம் போல் நினைத்துக் கொள்ளவும்,' என்று சொன்னேன். ஆதலால் தான் இவ்விதச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. அஹல்யை தான் என்செய்வாள்! நான்தான் என்செய்வேன்? இதற்கு அஜாக்கிரதையே காரணம்" என்று பலவாருக யோசனைசெய்து ஓடோடியும் தன் மைந்தனிருக்குமிடம் வந்து சேர்ந்தார்.

சிறிதுதூரத்தில் வருகின்ற தந்தையைக்கண்ட சிரகாரி 'தந்தை என்னருகே வருவதற்குள் அவர் வார்த்தையை நான் நிறைவேற்றுவிடில் என்னைச் சபித்துவிடுவார்' என்றெண்ணி உறையிலிருந்து கத்தியை யுருவித் தாயைக்கொல்ல யத்தனிக்கையில் 'குழந்தாய்! கொல்லாதே, கொல்லாதே' யென்று

உண்டான சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப்பார்க்கையில் தன் தந்தை அருகில் நிற்பதைக் கண்டான். உடனே கத்தியைக் கீழே போட்டுவிட்டு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். கௌதமர் மைந்தனை யெழுப்பி "என் கண்ணே! என்னை பீளா நரகத்தில் விழாமற் காப்பாற்றினதற்கு உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? வெகுகாலம் ஜீவித்திருப்பாயாக" என்று ஆசீர்வதித்தார்.

வாசகர்களே! மகாபாரதம் சாந்தி பர்வத்திலிருக்கும் இக்கதையின் அரிய பெரிய அநேகக் கருத்துக்களைக் கவனித்து அதன்படி நடக்க நாம் முயலுவோமாக.

:0:

ஒற்றுமை.

[திரு. இராமசாமி ஐயங்கார், ஆசிரியர்,
போர்டு ஹைஸ்கூல், நன்னிலம்.]

பஞ்சபூதங்களும், அப்பூதங்கட்கு இறைவனுடைய சாயலும் அடங்க ஒற்றுமையுடையன. மானுட தேகமும், அதில் மாண்புடனியங்கும் சித்துப்பொருளாகிய சூக்குமமும், ஆன்மாவுமாம். இப்பூத உடம்போ, பாதாதி கேச மீறுயுள்ள கண், காது, வாய், மூக்கு, கை, கால் முதலிய பல அவயவங்களைக் கொண்ட ஓர் அவயவ இவங்கத்திற்கும், அவ்வவயவங்களுக்கும் எவ்வாறாய் ஒற்றுமையுண்டாயிருக்கிறதென்பது கூர்ந்து கவனிக்கற்பாலது. ஓர் அவயவம் நோயுற்றால், மற்ற அவயவங்களும் தமக்கென்னென்று சும்மாவிராமல்ஒவ்வொன்றும்தனக்கே நேர்ந்ததாய் நினைத்து, அந்நோயை நீக்கந் தருந்த தந்திரம் யாவும் தானே புரிகின்றது. உதாரணமாக காலில முள்தைத்த தக்ஷணத்தில் உடல் குனிந்து, வளைந்து, துவண்டு, கை தொட்டு, அம்முள்ளைப் பிடுங்கி வேதனையைத் தணிக்கவும், கண் கலுழ்ந்து அவ்வேதனைக்காக யிரங்கவுங் காண்கிறோம்.

இவ்வாறே, பரம் பொருளும், நம்மையும் அவரில் ஒருநட்பான கண் காலாகிப் போல, அரசர் சாமானியர் நாளுகிய நமக்கு பல அவயவங்களைப் படைத்திருக்கின்றார். சரீரமெல்லாம்

கண்ணாயிருந்தால், எவ்விதம் கேட்பது? எல்லாம் காதுகளாக விருந்தால், எப்படி முகர்வது? ஆனால் கடவுள் தம் சித்தப்படி உறுப்புகளொவ்வொன்றையுஞ் சரீரத்தில் ஏற்றப்பெற்றி அமைத்திருக்கின்றார். கண்ணானது கையை நோக்கி, உன் உதவி எனக்கு வேண்டியதில்லை என்றும், தலையானது பாதங்களைப் பார்த்து நீங்கள் எனக்கு அவசியமில்லை யென்றுஞ் சொல்லக் கூடாமல் ஒன்றின் உதவி, பிறிதொன்றுக்கவசியமாவது போல், அரசர் அறிஞராதி உயர்ந்தோர்களின் உதவி மத்திய சாமானியருக்கும், மத்திம சாமானியரின் உதவி அரசர் முதலானோர்களுக்கும் அவசியமாயிருக்கின்றது. பானை, சட்டி, குடம், கலயம், முதலிய பலவாறான மட் பாத்திரங்கள், சமயலுக்கு ஏற்பனவற்றிற்குரிய தொழில் ஒன்றிற்கே புரியனவாகும். அவ்வாறே, இந்த உலகம் பலவிதமாய் வீரியபராக்கிரமத்தால் விளங்கும் விறல் வேற்றரும் நல்லியறிவால் மிக்க, கலை வல்லோரும், பிரபுக்களும், பிரஜைகளும், ஏனைய இழிசனரும், பாமரும், மத்திமரும், சாமானியருமாகவே ஏற்றக்குறைவாக, இலௌகிய வியாபாரம் ஒற்றுமையாய் நடந்தேறும் பொருட்டு தெய்வசங்கற்பத்தால் ஒருசமயம் வலியார் மெலியாரெனவும், மெலியார் வலியாரெனவுமாயினும், எல்லோரும் எக்காலத்தில் வலியோரும் மெலியோரும் ஆசாமற் சுழன்று வரம்பு கடவாதிருக்கும்படியாக்கப்பட்டனரென்றே கொள்ளக்கிடக்கின்றது. கடவுள் மனிதரைத் தமது சித்தத்துக்கொத்த வண்ணம் பல நிலையினராக வமைத்திருத்தல் நமக்கு நன்மை பயக்கும் ஒற்றுமை எண்ணியே யென்க. குயவனிஷ்டப்படி பல்வேறு பானை சட்டி முதலிய வகையால் உண்டாக்கப்பட்ட பாத்திரங்கள் இவ்வாறு எம்மை ஏன் விபரீதமாக உண்டாக்கினையென்று அவனைக் கேட்கக்கூடாததுபோல யாமும் நமது பல்வேறு பட்ட உலக நிலையை பூர்வ ஜன்மப் பிரயோஜன மென்று கொள்ளாது தேவ திருவுளத்தின் மாறாத நீதியென்றே கருதவேண்டும்.

இவ்வித ஏற்றக்குறைவின்றி யெல்லாரும் அரசராகவுயர்ந்தோராயின் அவ்வரசரின் மாகாரியம் பார்க்கும், அமைச்சன், பிரதானி, சேவகர், ஊழியர், உத்தியோகம் புரியவர்யாவர்? அப்படியல்லாமல் எல்லோரும் ஏழைகளாயின், அவ்வேழைகளின் வேலைகளையும், ஏவலூழியங்களையும் ஏற்று அவர்க்குற்ற சமயத்தில் ஊன்றுகோல் போலாகி சம்பள ஊதியமளிப்போர் யாவர்? அல்லாமலும் ஒருவற்கு,

"ஆங்கால மெய்வருந்தவேண்டாம்—தேங்
காய்க் கிளநீர்போல் வாய்க்குமோ"

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றித் தொடு
த்தகருமங்களாகா"

"வருந்தியழைத்தாலும் வாராதவர் வாரா பொருந்
துவன போமினென்றாற் போகா"

என்னும் முதுரைகளின்படி விதியின் பயனே பயனாகக் கொளினும்,

"தெய்வத்தானாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலிதரும்"

என்றபடி ஊழில்லாவிடினும் முயற்சியே பலனைத்தரும். யாவருக்கும் விதியில்லாமை பழியாகாது. ஒற்றுமையான முயற்சியில்லாமையே பழியாகும்.

இடைவிடாது ஒற்றுமையாய் முயற்சிசெய்வோர், பூர்வ கர்மத்தையும் விலக்குவர் என்னும்,

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலை வின்றித்
தாழா துஞற்று பவர்"

திருவள்ளுவருரைப்படி தெய்வ நியமனத்தால் நாமிவ்வுலக வங்கத்தில் எவ்வுறுப்பினராயியற்றப் பட்டிருக்கின்றோமோ, அந்நிலையில் திருப்தியடைந்து, எல்லாவற்றினும் மேலாய்க் கடவுளைச் சிநேகித்தும், பிறர் சிநேகத்தோடு மற்றவர் சுக துக்கங்களை நம்மவைகளாய்க் கொண்டும், ஓரங்கம்போல வொத்து நடப்போமாயின்,

"இடர்தீர்த்த வெள்ளாமை கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி—னடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்
விண்டவர் நூல் வேண்டாவிடும்" (ஏலாதி)

பிறருடைய துன்பத்தைப் போக்குவதும், பிறரை நிந்தியாமையும், கீழ்மக்கள் கூட்டத்தைச் சேராமலிருத்தலும், எல்லோருக்கும் பசி முதலான

வருத்தங்களைப் போக்குவதிலும், நிந்தனையுள்ள நடக்கையை யொழிப்பதும், கிரணப்பட்டவர்கள் விரும்பும்படியான சொற்களைச் சொல்லுதலும், ஆகிய இப்படிப்பட்ட குணங்கள் ஒருவனிடமுண்டானால், இவையே போதுமானதால் வேறு சாத்திர விதிகளை அனுஷ்டிக்கவேண்டுவதில்லை என்று ஆன்றோர் கூறுப. ஈருப்பிறப்பு சிநேகக்கிரியைகள் மட்டுமே கூறி எல்லாவற்றினும் மேலாய் லோகத்தலைவர் சிநேகக்கடமை கூறுதொழிதல் எவ்வாற்றாலோவெனின், கடவுள் சிநேகமில்லாவிடத்தும் பிறர் சிநேகமும், பிறர் சிநேகமில்லாவிடத்து கடவுள் சிநேகமுமின்றாதலின், ஒவ்வொன்றிற பிறிதொன்று பெறப்படுவதாகவே கொள்ளப்படும். இவையே.

> "அன்பிலா ரெல்லாந் தமக்குரியர், அன்புடையார்
> என்பு முரியர் பிறர்க்கு"

என்னும் திருக்குறளுக்கிலக் கணமாம்.

எங்கனமெனின், நாம் கடவுள்பேரில் கொண்டிருக்குஞ் சிநேசமானது, பிரபஞ்சத் தெய்பொருளின் மேலும், நாம் கொண்டிருக்குஞ் சிநேகத்தைவிட மேலானதாயிருத்தல் வேண்டும். அக்கடவுள் சிநேகமும், பிறர் சிநேகமுமின்மையே, கொலை, காமம், களவாதியாகிய குற்றங்களைச் செய்தற்குக் காரணமாதலுங் காண்க. இயற்கைப் பொருள்களுள்ளே, இயற்கைக்கிரமமாயேற்பட்ட இவ்வொற்றுமை, யந்திர, சூத்திர, கடிகாராதி செயற்கைப் பொருள்களில், அவ்வவற்றின் அவயவங்களாகிய சக்கரம் முதலிய வுறுப்புகள் இசைவுபெற்று ஒற்றுமையாய் உடன் சுற்றிப் பின்னப்படாமலிருக்குமாறே, நிலைத்திருந்து ஒழுங்குபட்டும், சிறிது பழுதுறவே சின்னபின்னப்பட்டுச் சிதைந்தழிவதும் போல், இவ்வுலக பொதுஜன சமூக வுடலின் அவயவங்களாகிற உறுப்புகளில் உட்பகையாகிய சேருறமலை, அவ்வொற்று சீர்குலைந்து முற்றுமே பழுதுறு மென்பதை பொய்யாமொழிப்புலவர் கூறியுள்ளார்கள்.

இப்படிக் கூறப்பட்ட ஏதுக்களைக்கொண்டு, உட்பகையறுத்துக் சர்குணத்தராய்ப் பிரபஞ்சத்திற்கே [illegible] ஜாதி மதாபிமானங்களைந்து, பிறருடை [illegible]

தன்வயத்தனாய்ச் சுயம் பிரகாசமாய்ச் சர்வ நன்மைச் சொரூபியாக விளங்கும் பரஞ்சோதியாக ஈசுவரனுடன் ஒற்றுமையுடையாராய், நாம் பிறவியெடுத்தற் பயனாக, லோகோபகாரமாய், நல்லவை தம்மால் இயன்றளவு புரிந்து, அல்லவை களைந்து மறுமையில் அவரோடு நித்திய மோட்ச சாம்பிராச்சியத்தில் வெகு காலம் வாழ்வோமென, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவகையும் கொடுக்கின்ற பரஞ்சோதி வடிவமாகிய ஈசுவரனுடைய திவ்ய பாதார கமலங்களில் வீழ்ந்து இறைஞ்சுவோமாக!

———:0:———

கம்பர் கவி நயம்.

[பண்டித-ரா. திம்மப்ப ஐயர், தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
முனிசிபல் காலேஜ், சேலம்.]

ஈன்றணிமைபொருந்தி அது தீர்ந்த குழவிக்குச் சுரக்கு முலைபோல நீர் மிக்க காவிரியினது கரைமரத்தைச் சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழ நாட்டையுடைய வேந்தன்

எருமைபோலும் வடிவையுடைய கரிய கற்பொருந்திய இடந்தோறும் பெற்றம் போலப் பரக்கும் யானையையுடைய வாய் வலியையுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினையுடையாய்! பெரும! நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ் செல்வத்தையுடையனாதலால் நினக்கு ஒரு காரியஞ் சொல்லுவேன் அதனைக் கேட்பாயாக. அருளையும் அன்பையும் நீக்கிப் பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கிடமாகக் கொள்பவரோடு பொருந்தாது நீ காக்கப்படும் தேயத்தைக் குழவியை வளர்ப்பாரைப்போலப் பாதுகாப்பாயாக. அளிக்கத் தக்கதொன்று அக்காவல், அது பெறுதற்கரிது.

இரவி தன் குலத்தெண்ணில் பல வேந்தர்தம்
பரவு நல்லொழுக்கின்படி பூண்டது
சரயு வென்பது தாய் முலை யன்னதிவ்
வுரவு நீர் நிலத்தோங்கு முயிர்க்கெலாம்.

என்பது கம்பரது இராமாவதாரத்துப் பாலகாண்டத்துள்ள சரயுவென்னு மாற்றினது பெருமையைக் குறித்துச் சொல்லும் பாசுரமாகும். இனியிதனிற் பொதிந்துள்ள பல்வகை நயங்களையு மாராய்வாம்.

சூரிய குலத்துதித்த எல்லையற்ற பலவாகிய அரசர்களது யாவராலும் புகழ்ந்து கூறுவதற்குரிய நல்லொழுக்கங்களுக்கேற் பத் தானும் மவற்றை மேற்கொண்டதாகிய சரயுவென்று எவ ராலு முயர்த்துக் கூறப்படும் நதியானது வலிமை பொருந்திய கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தே செழித்தோங்குதற்குரிய ஜீவராசிகளுக்கெல்லாம் (காத்தளிக்குந் தன்மையில்) அன்னை யினது (சுரந்தமூட்டும்) கொங்கைகளை நிகர்ப்பதாம் என்பது இதன் பொழிப்புரையாகும்.

வேந்தரது சீரிய குணங்களைப்போல் தானுமவ்வொழுக்கங் களைக்கொண்டுளதென்றும், மன்னுயிரைப் பாதுகாக்கும் தன்மையிற்றாயை நிகர்த்துப் பெருமையுற்றிருக்கின்றதென் றும் புனைந்துரைக்கப்பட்டதிலடங்கியுள்ள செம்பொருள்களை விரித்தெழுதுவாம்.

கொடை, யளி, செங்கோல், குடியோம்பல், இந்நான்கும் அரசர்க்கின்றியமையாதனவாகிய நான்கு சிறந்த குணங்களாம். இதனைக் "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும், உடையானாம் வேந்தர்க்கொளி" என்னும் தமிழ் மறையானு ணர்க. மற்றும் தன்னிடத்துள்ள குற்றங்களை யறவே நீக்கிக் கொண்டு பிறரிடத்துள்ள குற்றங்களை யொருவன் ஆராய்வானு யின் அம்மன்னவனுக்கு வரக்கடவதாகிய குற்றம் வேறென்னு ளது? ஒன்றுமின்றாமெனக். இதனைத் "தன் குற்ற நீக்கிப் பிறர் குற்றங்காண்கிற் பின் என் குற்றமாகுமிறைக்கு" என்னும் பொய்யா மொழியானு முணர்க.

இன்னும் வாய்மை, யாவரும் தன்னைப்பற்றுக் கோடாகக் கொள்ளுதற்குரிய களைகணும் பான்மையாதியனவும், வேந்தர்க் குரிய விழுமிய குணங்களாம். இனி இப்பண்புகள் ஆற்றினிட முளவேயோ என்பதையு நோக்குவாம். "அற்றக்கடைத்து மகல்யாற கழ்ந்தக் காற்றெற்றெனத் தெண்ணீர்படும்" என்று

சான்றோர் கூறியபடி மறவாக்கொடையும் இயல்பிலேயே தண்ணிய தாந்தன்மையோடு தன்னுயிர்களைத் தவறுமற் காக்குந் தண்ணளியுடைமையும், யாவற்றினுந் தன்னையின்றி யமையாத தலைமைத் தன்மையும் உலகுயிர்களைத் தான் பாய்ந்து விளையுளாதியவற்றாற் பாதுகாக்குந் தன்மையும் ஆற்றினிடத்துளவதால் காண்க. தான் புனிதமாயிருந்து கொண்டு தன்னில் மூழ்கியவரது மாசுபோக்கித் தூய்மைபுரிவதும், என்று மாறுது உலகில் பெருகி யோடுவதாகிய வாய்மையைக் கொண்டிருப்பதும், அதனுல் யாவர்க்கும் களைகணுயிருப்பதும் இதனிடத்திற்காணற்பாலன வாம். எனவே அரசரது முக்கியமான பெருங்குணங்களை யிஃதுடையதாயிருத்தல் ஈண்டுக் கவனிக்கற்பாலதாம். வேந்தருக்கு ஒழுக்கங்களைப்போல், தான் இவ்வுலகத்துப் பெருமையாக நிறைந்தொழுகிப் பெருகியோடுவதை நதிக்குவமையாகக் கொள்வது பொதுப்பான்மையதாம். தாய் தான் பசித்திருப்பினும் தன் மக்களதரும் பசியைக் காணச் சகியாது தன்னுலியன்ற வரையில் அவரது பசியைப் போக்க முயன்று அதனைத் தீர்த்து மகிழ்தல் போலவே, என்றும் வற்ருச் சரயுவும் இவ்வுலகத்து மன்னிய உயிர்களது பசியைப் போக்கிப் போஷிக்குந் திறத்தில் சிறந்த உபமானமாதல் பொருத்தமானதொன்ரும். இக்கருத்துப் போலவே புறநானூற்றிலும்

"புனிறுதீர் குழவிக்கிலிற்று முலைபோலச் சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர் மன்பதைபுரக்கு நன்னுட்டுப் பொருநன்" என ஓர் புலவர் சிறந்து கூறியிருப்பதை நன்கு காணலாம். தான் தளர்ந்தவிடத்தும் உலகையுபகரிக்கும் ஒப்புரவாந்தன்மையை இவ்வுவமான முகத்தால் பாலியாற்றினிடத்தமைத்துச் சேக்கிழார் கூறியிருக்குந் திறமும் பெரிதும் போற்றற்பாலதாம். அது

> "பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத்தாய்போல்
> மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகைவருட
> வெள்ள, நீரிரு, மருங்கு கால், வழிமிதந்தேறிப்,
> பள்ள, நீள்வயற், பருமடை, யுடைப்பது பாலி"

என்னும் பாசுரமேயாம்.

* "எருமையன்ன கருங்கல் இடைதோ
றானிற் பரக்கும் யானைய! முன்பின்
தானக நாடனே! நீயோபெரும!
நீயொ ராகலின் நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பு நீக்கி யாநா
நிரயங் கொள்பவரொடொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
யளிதோ தானேயதுபெற வருங்குரைத்தே"

என அரசரது பரிபாலனத்தன்மையைக் "குழவிகொள்பவரி னோம்புமதி" எனப் பாராட்டிக்கூறியிருத்தலும் அது சிற்சிலர்க்கே யன்றி ஏனைய ரெல்லோர்க்கும் பொருந்துதல் மிக வரிதாமொன்று என்று நுவலப்பட்டிருப்பதும் ஈண்டு நோக்கத் தக்கனவாம்.

---

* எனவே அரசனும் ஆறும் தத்தங்குடிகளைப் புரக்குந் தன்மையில் சிறு மகார்களைக் காக்கும் அன்னையரைப் போன்றிருக்கும் பான்மை வர்ணிக்கப்பட்டபடி பெரிது மனத்திற்கின்பம் பயக்கும் வகை ஈண்டுணரத்தக்கதாமென்க. 'தன்னுயிராமென வுலகிற்றங்கிய மன்னுயிரனைத்தையும் புரக்குமாட்சியான்' என்று தசரதன் செங்கோல் பாராட்டப்பட்டிருத்தலும் ஈண்டுக் கவனிக்கற் பாலதாம்.

———:0:———

ஆரியமும் அதன் பெருமையும்.

[ஓரங்கூர் S. ஜீவகாருண்யம் பிள்ளை, தமிழ் ஆசிரியன், ஒசூர்.]

கேழ்வரகு, ஆரியம், ராகி, என்பன எல்லாம் ஒரே தான்யத்தைக் குறிக்கும் பல சொற்களாம். ஆரியம் என்பது ஓர் சிறந்த உணவுப்பொருள். அத்தான்யம் புஷ்டியும் ஆரோக்கியமும் அதிக பலமும் அளிக்கக்கூடியது. வயதில் முதிர்ந்தோரன்றி சிறு குழந்தைகளுக்கும் வளர்ச்சியைக்கொடுக்கக்கூடியது. இஃது விளைவிலும், அளிக்கும் நன்மையிலும், கொடுக்கும் பலத்திலும் மற்ற தான்யங்களில் முதன்மையாய் நிற்பது.

ஆயினும் சிலமாந்தர் இதனை எளிய உணவுப்பொருளாக எண்ணி இகழ்கிறார்கள். அதன் காரணம் யாதெனின், அதனைப் பெரும்பாலும் எளியோர் உபயோகிப்பதைத் தாங்கள் கண்ணூடாகப் பார்ப்பதே. அதன் மர்மங்களை அறிந்தோர் அதனை இகழார். அதன் குணத்தை உணர்ந்தால், தனவந்தரும் விரும்புவர். நெல், கோதுமை ஏராளமாய் விளையும் நீரா ரம்பமான இடங்களில் இதனை பெரும்பாலும் கவனிப்பதில்லை.

இப்பயிருக்குத் தண்ணீர் அதிகம் வேண்டுவதில்லை. சொற்ப மழையிலும் பனியிலும் நன்றாய் வளரும். சில இடங்களில் தண்ணீர்ப் பாய்ச்சியும் பயிரிடுகிறார்கள்.

இதை மாவாக அரைத்து இரண்டுவிதமாக சமைக்கிறார்கள். ஒன்று களி. மற்றொன்று கூழ். களி, மாவைக்கரைத்து புளிக்கவைக்காமல் சமைப்பது. கூழ் புளிக்கவைத்து சமைப்பது. பெரும்பாலோர் இத்துடன் நொய்யும் சேர்த்துக்கொள்கிறார்கள். களி குளிர் நாட்டிலும், கூழ் வெயில் எறிக்கும் சாதாரண சம நிலங்களிலும் அரோக்யத்தைக் கொடுக்கும்.

களியை உண்டால் பசியை நெடுநேரம் தலைகாட்டாமல் செய்யும். உடம்பில் சூட்டை உண்டாக்கும். குளிராலும் பனியாலும் ஏற்படும் இருமலுக்கு கைகண்ட மருந்து. சுரம் முதலியன கண்ட காலங்களில, சாதம் உள்ளுக்குச் செல்லாத காலத்திலும் இஃது அரோக்யமும் பத்தியமுமான உணவு. பாலில்லாக் குழந்தைகளுக்கு ஆரியத்தைச் சுத்தம் செய்து கஞ்சி காய்ச்சி உபயோகிக்கிறார்கள். சிலர் இதை வீக்கங்களுக்கும் பிடிப்பு, சுளுக்கு, முதலியவைகளுக்கும் பத்துபோடுகிறார்கள்.

ஆரியத்தை தண்ணீரில் ஊரவைத்து நன்றாய் கழுவி அரைத்து வடிகட்டினால் சுத்தமாகிறது.

(தொடரும்.)

—(0)—

மதிப்புரை.

"ஆரோக்கிய தீபிகை."

இவ்வாழ்வை இன்பமாக நடத்தி வருவதற்கு அவசியமான பல சுகாதார ஆரோக்யமுறைகளைத் தமிழ் நாட்டினருக்குபதேசித்து வரும் இவ்வருமையான மாதாந்த சஞ்சிகையின் நடை முதல் மாதத்திய இதழ் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. சரீராரோக்கியத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியமும் அதனைக் காப்பாற்றும் மார்க்கங்களும் அடங்கிய பல அரிய வியாசங்கள் இந்த சஞ்சிகையில் அடங்கியிருக்கின்றன. முக்கியமாக குடியிருப்பு வீடுகளை சூரிய வெளிச்சம் நன்றாக வீசக்கூடிய நிலைமையில் அமைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றிய வியாசத்தைத் தற்கால நகர நிர்மாணிகள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். மாணவர்களுடைய சரீர ஸ்திதியை சரியாகப் பாதுகாக்கும் முறைகளும் பல வியாசங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சரீரப் பயிற்சியின் அவசியமும் தகுந்த ஆதாரங்களுடன் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆகாரத்தை உட்கொள்ளவேண்டிய மார்க்கத்தைப்பற்றி இந்த சஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கும் முறைகளை நமது சகோதர, சகோதரிகள் பின்பற்றி நடந்தால் பல வியாதிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடும். இதிலடங்கியுள்ள எல்லா வியாசங்களும் அறிவை வளர்க்கக்கூடியவைகளாக இருக்கின்றன. சித்திரப் படங்களுடன் கூடிய இந்த மாதாந்த சஞ்சிகையின் வருடசந்தா ரூபா 1-8-0 தான். வேண்டுவோர் சென்னை தம்பு செட்டித்தெரு, 323-ம் நம்பர் கட்டடத்திலுள்ள இந்தப் பத்திரிகையின் காரியாலயத்திற்கு எழுதி சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளலாம்.

தனபாலன் அல்லது விஷக்கத்தி.

ஒரு இனிமையான, சிறுவர்களுக்கான, சிறந்த கதைப் புத்தகம். பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு என்றே குழந்தைகளுடன் அதிக நாள் பழகிய ஒரு அனுபவமிகுந்த கதாசிரியரால் எழுதப்பட்டது. ஒவ்வொரு மாணவ மாணவியும் வாங்கி வாசிக்கத்தக்கது. பரீக்ஷாகாலங்களில் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைக்கொண்டு நடித்தல் காட்ட இதனைப்போலத் தக்க துணை செய்வது ஒன்றுமில்லை என்றே நம்பலாம்.

விலை புத்தகம் ஒன்றுக்கு அணா இரண்டுதான்.

(உபாத்தியாயர்களுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.)

Apply to L. S. K. SAMI,
C/o தர்மபோதினி ஆபீஸ், தர்மபுரி, (சேலம் ஜில்லா)

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், இராஜாங்க விஷயம், ஜனசமூக சீர்திருத்தம், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத் சிரோன்மணிகளால் எழுதப்பட்டு வெளிவந்துலவுகிறது.

மானேஜர்,

"கற்பகம்" ஆபீஸ், புதுவை.

ஞான இரகசிய சிந்தாமணி.

—:0:—

[ஓர் அரிய வேதாந்த நூல்.]

விலை அணா 8.

நாம் மானிட ஜன்மமெடுத்துள்ளது இறைவனையறிந்து முத்தியடைதற்பொருட்டேயாம். அவ்விறைவனை அறிதற்கு வேதாந்த நூல்களே ஆராயத்தக்கனவாம். மனைவி மக்களுடன் எப்பொழுதும் அல்லற்பட்டு உழவாது இனியேனும் முத்தியாங்கரை சேர முயலவேண்டாவோ? இந்நூல் மோக்ஷமடைதற்குரிய வழியை நன்கு காட்டுகின்றது. பல வேதாந்தநூல்களைக் கற்றபலனை இவ்வொரு நூலின் மூலமாகவே அடையலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. வேதாந்திகளிடத்தும், தமிழபிமானிகளிடத்தும், நற்கதியை அடைய விரும்புவோரிடத்தும் இந்நூல் இருக்கவேண்டியதென்பதும், இவ்வொரு நூலே நன்னெறியைக்காட்டி வீடுபெறச்செய்யுமென்பதும் இந்நூலை வாசிப்போர்க்கு நன்கு விளங்கும்.

தனிப்பிரதி விலை அணா 8.

டஜன் பிரதிகள் ஒரேதடவையில் வாங்குவோர்க்கு ஒன்று இனாமாகக்கொடுக்கப்படும்.

வியாபாரிகள் நேரே எமக்கெழுதுக.

விலாசம் :—

ராமசுப்பிரமணியநாவலர்,

ராமவிலாசம், பத்மநாபபுரம்,

தக்கலை போஸ்டு.

படங்கள்! படங்கள்!!

கார்டு சைஸ் படங்கள்.

தங்கள் தேவைக்கு விரைந்து எழுதுங்கள்.

இதுபோன்ற அழகிய லீலா விநோதப் படங்கள் யாரும் வரவழைத்திருக்கமாட்டார்கள். இந்தப்படங்கள் தனியாய் பாரிஸ் பட்டணத்திலிருந்து வரவழைத்திருக்கிறோம். வெகு நேர்த்தியாய் பார்ப்பவர் மனதைக் கவரும் வண்ணம் பளபளப்பும் கலரும் கலரில்லாமலும் கூடிய கார்டு சைஸ் படங்கள்.

1 நெ டஜன் 1-க்கு 2—8—0. 2 நெ. டஜன் 1-க்கு 2—0—0
3 நெ , 1—8—0. 4 நெ. கலர் புஷ்பங்கள் குழந்தைகள் 1—0—0

பாகிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்.

விலாசம் : பி. எஸ். ராய், புதுவை.

இனாம்! இனாம்!!

கீழ்கண்ட சாமான்களில் ஒன்றை வாங்குபவர்கட்கு

பாரிஸ் வாசனைபுட்டி 1, பவுடர் டப்பி 1, துணியில் வைக்கும் வாசனை பொட்ளம் 1 முகத்திற்கு போடும் கிரீம் புட்டி 1. ஆகிய நான்கு சாமான்களும் அடங்கின பெட்டி ஒன்று இனாம்.

மப்ளர் செண்டு ரூ 3—8—0	லேபுளோர் ரூ 3—0—0
ஒல்ட் செண்டு ,, 3—8—0	எஸ்மி ,, 3—0—0

தீர்வை, பாக்கிங் போஸ்டேஜ், பிரத்தியேகம்.

இன்னும் அநேகவித செண்டுகள், சோப்புகள், பவுடர்கள் விலை சகாயமாய் சில்லரையிலும், மொத்தமாயும் கிடைக்கும். வேண்டிய தினுசுகளுக்கு விலை விபரத்திற்கு எழுதவும்

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் இரண்டுவித வாசனை கார்டுகள் இனாமாக அனுப்பப்படும்.

ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

தர்மவித்யா பிரைஸ் சீட்டு.

(தர்மபுரியில் சமஸ்கிருத இலவச பாடசாலை ஏற்படுத்த)

ரூ. 7500 ஐ 2050 பிரைஸ்களாக கொடுக்கப்படும்.

1925-வருஷம் மே-மீ 20-உ பிரைஸ் துலுக்கப்படும்.

டிக்கட் 1-க்கு அணா 0—8—0

தருமபுரியில் இலவச சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்த திரவியம் சேகரிக்கும் பொருட்டு மேற்படி பிரைஸ் சீட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியால் இதைக் கண்ணுறும் நேயர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்தும் டிக்கட்டுகளைப்பெற்றும் டிக்கட்டு புஸ்தகங்களை விற்றும் நமக்கு பணம் அனுப்பிக்கொடுத்து மேற்படி பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த தகுந்த உதவி புரியுமாறு கோரப்படுகிறது

P. S. கிருஷ்ணன்
மானேஜிங் டைரெக்டர்,
தர்மவித்யா பிரைஸ் சீட்டு, தர்மபுரி, சேலம் ஜில்லா.

புத்தகங்கள் புத்தகங்கள்

ஹிந்துக்களுக்கு மிக அவசியமான புத்தகங்கள்.

ஆசிரியர் :—மைலாப்பூர் **K. S.** சேஷகிரி ஐயர் எழுதியவை.

		ரூ.	அ.	பை
1.	மஹா பாரத வசனம் (முதற்பாதி) ...	1	0	0
2,	இஹபரசுகம் அல்லது 50 மஹாத்மாக்கள் ஞானிகளின் அமுத மொழிகள்	0	8	0
3.	'எல்லாம் நானே' அத்வைத உண்மையை விளக்கும் புத்தகம்	0	2	0
4.	உத்தம பத்தினிகள்...	0	2	0
5.	ஈஸ்வரலீலை (திருவிளையாடற் சுருக்கம்) ...	0	8	0
6.	உத்தம பக்தர்கள்	0	2	0
7.	'Dozen Weapons' in English. ...	0	8	0
8.	The 'Mahabartha' in English ...	0	10	0

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதுவதுடன் ஈது போதினியின் பெயரையும் எழுதுமாறு கோருகிறோம்.

K. S. சேஷகிரி அய்யர்,
43, ந்யூஸ்ட்ரீட், மைலாப்பூர், மதராஸ்.

சஞ்சீவி பிரஸ், தர்மபுரி, சேலம் ஜில்லா.

நேர்த்தியான அச்சுவேலைகள்.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பாரங்கள் ரிஜிஸ்டர்கள் முதலியன உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு எங்களிடத்தில் எப்பொழுதும் ஆஜரில் கிடைக்கின்றன. விலை சரசமாய் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் ஷை விலாசத்திற்கு ஆர்டர் செய்யவேணுமாய் கோரப்படுகிறது. டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டு பாரங்கள் :—வக்காலத்நா, படிமிமோ, நக்கல்மனு முதலிய சகலவித பாரங்களும், வில்லேஜ் முன்சீப கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு இவைகளுக்குத் தேவையான சாக்ஷி சம்மன், பிரதிவாதி சம்மன், டிக்ரி நிறைவேற்று மனு முதலியவைகளும், எலிமெண்டரி பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான மாதாந்திர வருஷாந்திர கணக்கு பாரங்கள் (Monthly and annual return forms,) பையன்கள்—உபாத்தியாயர்கள் தினசரி குறிப்பு ரிஜிஸ்டர்கள் (Boys and Masters' Attendance Registers). கோவாபரேடிவ் சொஸைடிகளுக்குத் தேவையான ரிஜிஸ்டர்கள், பாரங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள். நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும் தமிழிலும் சீக்கிரமாகவும் சரசமாயும் செய்துதரப்படும். புக்பைண்டிங் முதலிய வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

மானேஜர் சஞ்சிவி அச்சுக்கூடம்
தர்மபுரி.

விஷயதானம் செய்வோர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. வியாசங்கள் அரை கடுதாசியில் பாதி இடம்விட்டு எழுதப்படவேண்டும். எழுத்துகள் தெளிவாயிருக்கவேண்டும்.

2. பிரதி இங்லீஷ் மாதமும் 10-உக்குள் கிடைக்கும் வியாசங்களை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

3. கிடைத்த வியாசங்களைப் பிரசுரிக்கவும், விஷயங்களைச் சுருக்கவேண்டிய இடங்களில் சுருக்கியும், மாற்றவேண்டிய இடங்களில் மாற்றியும் பிரசுரிக்கும் சுதந்திரம் பத்திராதிபருக்குண்டு.

4. பிரசுரிக்கப்படாத விஷயங்களை வாபஸ்பெற விரும்புவோர் தபால்பில்லைகளை (Postage stamps) அனுப்பவேண்டியது.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. சந்தாதாரராகச் சேர விரும்புவோர் சந்தாவை மணி ஆர்டர் மூலமாக அனுப்பி சஞ்சிகையைப்பெறுவது உசிதமானது.

2. இடமாறுதல்களை உடனுக்குடனே பத்திராதிபருக்கு தெரிவித்துக்கொண்டால் சஞ்சிகையை அவ்விலாசத்திற்கனுப்பப்படும்.

3. கடிதமெழுதும்போது அவர்களுடைய சந்தா நெம்பரையும் அதில் குறிப்பதுடன் பதிலை எதிர்பார்ப்போர் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

4. சஞ்சிகை பிரதிமாதமும் 1-உ அனுப்பப்படுமாகையால் சஞ்சிகை சேராதசந்தாதாரர்கள் 10-உக்குள் தெரிவிக்கவேண்டும்.

5. 12 சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நேயர்களுக்கு ஒரு வருஷத்திய சஞ்சிகை இனமாக அனுப்பிவைக்கப்படும்.

பத்திராதிபர்.

உ

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை.

இப்பெயர்கொண்ட செய்யுள் நூல் தளவாய்ப்பேட்டை அரங்கனூர் கவிராஜசாலியத்றப்பட்டுச் சமீபத்தில் வெளிவந்தது. இதில், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சிறப்பு, மும்மணமாண்பு, முருகன் பெருமை, நதி, கடல், மலை, காடு ஆகியவற்றின் சிறந்த வருணனை முதலியன மிக நன்றாகக் கூறப்பட்டுள்ளன. இதனைப் படிப்போர் பழந்தமிழ் நூல் எனவே இதனைக் கூறுவிற்பர் என்பது முற்றும் தோற்றமாம். 1500 செய்யுள்கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 1—4—0 தான். ஒரேசமயத்தில் 12 பிரதிகள் வாங்குவோருக்கு ரூ. 1 வீதம் தரப்படும். வேண்டுவோர் கீழ்குறித்த விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

இங்ஙனம்,
பண்டித ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர், முனிசிபல் காலேஜ்
வீரபத்திர சுவாமி கோயில் தெரு, சேலம்.

Tel Address—"KADARSTORE"

தந்திவிலாசம்—"கதர் ஸ்டோர்."

அசல் கதர் ஜவுளிகள்!

எங்களிடத்தில் சொந்தசாலையில் தயார் செய்த வேஷ்டிகள், ஷர்ட்டிங் கோட்டிங் தினுசுகளும், பீட்டி தினுசுகளும், பலவித கலர்களில் ஓரங்களில் சரிகை, பட்டுக்கரை முடிகள், சாதா வெள்ளை முடி அங்கவஸ்திரங்கள், சேலம் தினுசு பட்டு சரிகைகளால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், நூலினால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், துண்டுகளும், சேலைகள், தாவணிகள், தலைப்பாக்கள், தொப்பிகள், ஷால்வைகள், கைக்குட்டைகள். சொட்டடி, சாதா துண்டுகள், லுங்கி தினுசுகள், இன்னும் அனேக ரகங்களில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை மிக்க சரசம்.

N. கோவிந்தராவ், கதர் ஸ்டோர், ஈரோடு.

Printed and Published by P. R. Srinivasan at the Sanjivi Press, Dharmapuri.